வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 11.08.2025 திங்கட்கிழமை | இதழ் : 223 | பக்கங்கள் : 12

# படையினர் தாக்கி இறந்தவரின் சடலத்தின் மாதிரி கொழும்புக்கு

- த. பிரதீபன் -

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 11**

**இராணுவத்தினர் தாக்கியதில் உயிரிழந்தார் என்று கூறப்படும் முத்துஐயன்கட்டு குளத்தில் மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தரின் சடலத்தின் மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.**

கடந்த வியாழக்கிழமை இரவு முல்லைத்தீவு - முத்துஐயன்கட்டு - ஜீவநகர் பகுதியிலுள்ள இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு 5 இளைஞர்கள் படையினரால் தாக்கப்பட்டனர். இவர்களில் மூவர் தப்பியோடிய நிலையில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் காப்பாற்றப்பட்டார். மற்றொருவர் காணாமல் போன நிலை யில் அவரின் சடலம் முத்துஐயன் கட்டு குளத்திலிருந்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் ஜீவநகர் பகுதியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தரின் சடலம் உடல் கூராய்வு பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

உடற்கூராய்வு பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. அவரின் உயிரிழப்பு தொடர்பில் தெளிவான காரணம் சட்ட மருத்துவ அதிகாரியால் குறிப்பிடப்படவில்லை என்று தெரிய வருகிறது.

இந்த நிலையில், இறந்தவரின் சடலத்தின் மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சி. ஐ. டியிடம் உண்மைகளை கூறுவதற்கு தயாராக இல்லை

### சோமரத்ன ராஜபக்ஷ கூறினாரென்று அவரின் மனைவி, சகோதரி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 11

சர்வதேச விசாரணையில் சாட்சியம் அளிப்பதற்கே சோமரத்ன ராஜபக்ஷ தயாராகவுள்ளார். குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்தால் அவர்களிடம்

11

## இளைஞர் கழகங்களை அரசியல் மயப்படுத்தாதீர்

### முன்னாள் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஓக. 11

நாட்டின் இளைஞர் கழகங்களை அரசியல் மயப்படுத்த வேண்டாம் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க நேற்று மக்களுக்கு

11

## அக்கராயன் விபத்தில் பெண் ஒருவர் மரணம்

கிளிநொச்சி, ஓக. 11

மோட்டார் சைக்கிளும் காரும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கிளிநொச்சியில் அக்கராயன் - முறிகண்டி பிரதான வீதியில் அமைதிபுரத்துக்கு அண்மையாக நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற 44 வயதான பளை - இயக்கச்சியை சேர்ந்த பெண் ஒருவரே உயிரிழந்தார்.

விபத்து நடந்த இடம் கிளிநொச்சி,

11

## செப்.20இற்கு முன் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு!

கொழும்பு, ஓக. 11

நாடளாவிய ரீதியில் நேற்று நடை பெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் செப்ரெம்பர் 20ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ. கே. எஸ். இந்திகாகுமாரி

11

## வட, கிழக்கில் படை பிரசன்னத்தை கண்டித்து வெள்ளியன்று ஹர்த்தால்!

### இலங்கை தமிழ் அரசு கட்சி விடுத்தது

கொழும்பு, ஓக. 11

வடக்கு, கிழக்கில் இராணுவம் தொடர்ச்சியாக நிலை கொண்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 15ஆம் திகதி - வெள்ளிக்கிழமை ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம். ஏ. சுமந்திரன் இந்தப் போராட்டத்துக்கான அழைப்பை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு முத்துஐயன்கட்டில் இளம் குடும்பஸ்தர் இராணுவத்தினரின் தாக்குதலில்

11

## மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து புதிய தீர்மானம்!

### பிரிட்டன், கனடா அறிவிப்பு

கொழும்பு, ஓக. 11

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் இலங்கை குறித்து புதிய தீர்மானம் முன்வைக்கப்படும் என்று பிரித்தானியா, கனடா நாடுகள் அறிவித்துள்ளன.

எனினும், இந்தத் தீர்மானம், முன்னைய தீர்மானங்களுடன் ஒப்பிடும் போது மென்மையான தாக இருக்கும் என்று இலங்கை அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஆங்கில செய்தித்தாள் ஒன்று கூறுகிறது. இந்த விடயம் இலங்கை அரசாங்கத்துக்கு வாய்மொழியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

மேலும், இலங்கை குறித்த முந்தைய தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கிய அமெரிக்கா,

11

## பிள்ளைக்கு உணவூட்டும் ஆசை நிறைவேறாமலே இறந்த தாயார்

### தாயின் ஞாபகார்த்தமாக குழந்தைகளுக்கு உணவூட்டிய அரசியல் கைதியின் சகோதரி

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஓக. 11



அரசியல் கைதியாக சிறையிலுள்ள தனது மகனுக்கு தன் கைகளால் உணவூட்ட வேண்டும் என்ற ஆசை நிறை வேறாமலேயே உயிரிழந்த தாயின் நினைவாக சிறாருக்கு உணவூட்டிய நெகிழ்ச்சி சம்பவம் அராலியில் இடம்பெற்றுள்ளது.

அரசியல் கைதியான விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன் என்பவரின்

11

### புலிகள் பயங்கரவாதிகள்

## மன்னார் சுகாதார பணிப்பாளர் எழுதிய கடிதத்தால் சர்ச்சை!

மன்னார், ஓக. 11

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி ஒருவரை பயங்கரவாதி என்று சுட்டி மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. விநோதன் எழுதிய கடிதம் எதிர்ப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது.

அந்தக் கடிதமானது குடும்ப நல சுகாதார அலுவலரான இன்பராசா விஜயலட்சுமி என்பவருக்கு எதிராக எழுதப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் முன்னாள் போராளியான அவரின் கணவரான இன்பராசாவை "எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதி", என்று

11

## மலேரியாவால் ஒருவர் மரணம்

- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 11

மலேரியா நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் உயிரிழந்தார்.

நெடுந்தீவைச் சேர்ந்த 34 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார். மலேரியா நோய்த் தாக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட அவர் யாழ். போதனா

11

## சலுகைகளை நீக்குவதற்கு எதிராக இணையும் முன்னாள் ஜனாதிபதிகள்

கொழும்பு, ஓக. 11

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்கும் சட்டமூலத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர்.

இந்த சட்டமூலத்தின் சட்டபூர்வ நிலையை ஆராய அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளும் சுமார் 50 சட்டத்தரணிகள் கொண்ட குழுவை அணுகியுள்ளனர் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை மலர் சாலையிலுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிமனையில் முதல்கட்டமாக கலந்துரையாடல் நடைபெற்றது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் நடைமுறைகளில் இராணுவத்தின் தலையீடு

## உடன் நிறுத்த வலியுறுத்தி ஜனாதிபதிக்கு சிறீதரன் கடிதம்

கிளிநொச்சி, ஓக. 11

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவப் பிரசன்னம் அதிகம் காணப்படுகிறது. அத்துடன், போரால் நேரடியாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் சிவில் நடைமுறைகளில் இராணுவத் தலையீடு தீவிரமடைந்துள்ளதால் இந்த செயல்பாட்டை உடன் நிறுத்த வலியுறுத்தி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சயின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கடிதம் அனுப்பியுள்ளார்.

வட மாகாண ஆளுநர், கிளிநொச்சி மாவட்ட செயலாளர், கரைச்சி, பூநகரி பிரதேச செயலாளர்கள், அந்தப் பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கும் அந்தக் கடிதம் பிரதியிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில்,

போருக்கு முற்பட்ட காலத்தில் கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கிளிநொச்சி பொதுநூலகம் பொது விளையாட்டு மைதானம் என்பவற்றுக்குரிய 13.5 ஏக்கர் காணி போருக்குப் பின்னர் இராணுவத்தினரால் முழுமையாக கையகப்படுத்தப்பட்டிருந்தது.

இதில் 9 பரப்புக் காணி பொதுநூலகத்துக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த 10 வருட போராட்டத்தின் விளைவாக 5 பரப்பு காணி மட்டும் விடுவிக்கப்பட்டு நூலக நிர்மாணத்தின் முதல் கட்டப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும், கிளிநொச்சி மாவட்டத்தின் நகர வடிவமைப்பில் முக்கியபங்கு வகிக்கும் பொது நூலக காணியின் ஒருபகுதி இன்றளவும் இராணுவத்தால் விடுவிக்கப்படாதுள்ளமை தொடர்புடைய தரப்பினரின் திட்டமிடலிலும் செயல்பாடுகளிலும் மாவட்டத்தின் கல்வித் தளத்திலும் பாதகமான தாக்கங்களை உருவாக்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தின் ஒருபகுதி இராணுவ முகாமாக உள்ள சமநேரத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்கு தேவையான காணியில் இராணுவ நினைவுத்தூபி அமைக்கப்பட்டு இராணுவத்தளமாக எல்லைப் படுத்தப்பட்டுள்ளது. அந்தக் காணியின் ஒருபகுதியை இலவச இணையதள வலையமைப்பாக பிரகடனப்படுத்தியுள்ள இராணுவத்தினர் அதனைப் பயன்படுத்தி இளைஞர், யுவதிகளை குறித்த பகுதிக்குள் உள்ளீர்ப்பதன் மூலமாக சமூக விரோத செயல்பாடுகளுக்கான பகிரங்க வெளியை ஏற்படுத்தியுள்ளனர்.

2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் நடைபெற்றபோது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கல்வித் திணைக்களங்களின் மேற்பார்வையில் நடாத்தப்பட்டுவந்த முன்பள்ளிகள் இராணுவத்தினரின் சிவில் படையினரால் வலுக்கட்டாயமாக கையகப்படுத்தப்பட்டு அங்கு கற்பிக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்களும் சிவில் படையினரின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 303பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 166பேரும் யாழ்ப்பாணத்தில் 12பேருமாக 481பேர் இராணுவப் படையணிச் சம்பளத்தைப் பெற்று கடமையாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரிலும் சில கிராமங்களிலும் பொதுப் பயன்பாட்டிடங்களை அண்மித்த பகுதிகளில் உணவகங்களையும் சிகை அலங்கரிப்பு நிலையங்களையும் இராணுவத்தினர் நடத்திவருகின்றமை உள்ளூர் வர்த்தகர்களுக்கு வருமான இழப்பையும் சமூக முரண்நிலைகளையும் ஏற்படுத்தியுள்ளது. கிளிநொச்சியின் முதன்மை அடையாளங்களுள் ஒன்றாக விளங்கும் சுற்றுலாத்தளமான கௌதாரிமுனை கடற்கரை பகுதியை கட்டண அறவீட்டுடன் நிர்வகிக்கும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றமையானது பொருத்தமற்றது.

ஆகவே கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் செயல்பாடுகளில் இராணுவத்தின் தலையீட்டை உடனடியாக நீக்குவதோடு முன்பள்ளிகளை உடனடியாக மாகாண கல்வி அமைசசின் கீழ் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

இலங்கைக்கு கஞ்சா கடத்த முயற்சி:

# பருத்தித்துறையை சேர்ந்த இருவர் இந்தியாவில் கைது

புதுச்சேரி, ஓக. 11

படகு மூலம் கஞ்சா கடத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறையை சேர்ந்த இருவரை இந்தியாவின் புதுச்சேரி மாநில சிறப்புக் காவல் குழு கைது செய்துள்ளது.

இதன்போது ஒரு பைபர் படகு, 50 ஆயிரம் இந்திய ரூபாய் மற்றும் கைபேசிகள் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான இருவரும் கஞ்சா போதைப்பொருளை காரைக்காலில் கொள்வனவு செய்து இலங்கைக்கு கடத்த முயன்போதே கைது செய்யப்பட்டனர். கைதான இருவரும் பருத்தித்துறையை சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கைதானவர்களிடமிருந்து 304 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், கடந்த மாதம் வவுனியா, திருகோணமலையைச் சேர்ந்த நபர்கள் இருவர் கைது காரைக்காலில் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முத்துஐயன்கட்டு படுகொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்!

## காதர் மஸ்தான் எம். பி. கோரிக்கை

வவுனியா, ஓக. 11

முத்துஐயன்கட்டில் இடம்பெற்ற படுகொலையின் பின்னணி வெளிப்படுத்தப்பட்டு, இந்த படுபாதக செயலை செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே .காதர் மஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

யுத்தம் முடிவடைந்த பின்னரும் சிறுபான்மை மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் இடம்பெறுகின்ற இவ்வாறான நிகழ்வுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த படுபாதக சம்பவங்கள் காரணமாக அப்பகுதி மக்கள் ஐயமும் பீதியும் அடைந்துள்ளனர்.

ஆகவே, மக்கள் பெரும் நம்பிக்கையில் வாக்களித்து ஆட்சிப்பீடம் ஏறியுள்ள இந்த அரசாங்கம் இந்த நிலமைகளை கருத்தில் கொண்டு விரைவாக செயல்பட்டு குற்றவாளிகளை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# மகா கும்பாபிஷேகம்

வடமராட்சி, ஓக. 11

புலோலி குரும்பைகட்டி சாமுண்டாம்பிகா சமேத ஞான வைரவர் ஆலய நவக்கிரக தேவர்கள் நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கர்மாகிரியைகள் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5.50 மணிமுதல் ஆரம்பமாகும்.

தொடர்ந்து, 20ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணி வரை பக்தர்கள் எண்ணெய்காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். மறுநாள் வியாழக் கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

ஆலய பிரதமகுரு சிவசிறீ வை. இராமேஸ்வரக் குருக்களின் உதவியுடன் கட்டுவன் முத்துமாரி அம்மன் கோவில் பிரதமகுரு சிவசிறீ சிவபாத ஆறுமுகக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா குணரத்தினம் தெரிவித்துள்ளார். (ஐ-02)

# நெடுந்தீவுக்கான படகுகள் சேவை இன்றுமுதல் அதிகரிக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஓக. 11

நெடுந்தீவுக்கான போக்குவரத்து இடர்பாடுகளை குறைக்கும் நோக்கில் இன்று திங்கட் கிழமை முதல் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையேயான படகு சேவை பரீட்சார்த்தமாக அதிகரிக்கப்படுகிறது.

நெடுந்தீவுக்கு தினமும் அதிகளவிலானோர் பயணிக்கும் நிலையில் சேவையில் ஈடுபட போதிய படகுகள் இல்லை. இதனால், அங்கு பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் உள்ளிட்டோர் அதிகாரிகளுடன் இந்த விடயம் குறித்து ஆராய்ந்தனர்.

இதன் அடிப்படையில், இன்று திங்கட்கிழமை முதல் காலை 6.15 மணிக்கு முதலாவது படகும் 6.45 மணிக்கு இரண்டாவது படகும் நெடுந்தீவிலிருந்து புறப்படும். மீளவும் இந்தப் படகுகள் காலை 7.30 மணிக்கும் 8.30 மணிக்கும் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு புறப்படும்.

இதேபோன்று, பிற்பகல் 2.30 மணி, 3.30 மணிக்கு படகுகள் நெடுந்தீவிலிருந்து புறப்படும். இவை குறிகாட்டுவானிலிருந்து பிற்பகல் 4.00 மணிக்கும் 4.45 மணிக்கும் புறப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 7 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது!

மன்னார், ஓக. 11

மன்னாரை அண்மித்த கடற்பகுதியில் மீன்பிடித்த 7 இந்திய மீனவர்களை தாம் கைது செய்துள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வட மத்திய கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட படகுடன் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் கடற்றொழில் நீரியல் வளங்கள் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று!

யாழ்ப்பாணம், ஓக. 11

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குழு இசையை திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் மாணவர்கள் வழங்குவர். வயலின்- இராசரத்தினம் நிறோசன், மிருதங்கம் - மகேந்திரன் லோகேந்திரன்.

இசையரங்கில், பாட்டு - எம். எஸ். பிரதீபன், வயலின் - கேதீஸ்வரன் வேலதீபன், மிருதங்கம் - வரதராஜ சர்மா றமண சர்மா, கெஞ்சிரா - றமண சர்மா லய சர்மா, மோசிங் - றமண சர்மா கானாமிருத சர்மா. (ஐ)

# கல்குருவியை பாதுகாக்குமாறு விழிப்புணர்வு அறிவிப்பு பலகை



யாழ்ப்பாணம், ஓக. 11

அழிவின் விளிம்பிலுள்ள கல்குருவி (Indian Courser) பறவை இனத்தை பாதுகாக்கும் நோக்கில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வேலணையில் அறிவிப்பு பலகை நாட்டப்பட்டுள்ளது.

மண்கும்பான் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்புறமாக இந்த அறிவிப்பு பலகை நாட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் நெடுந்தீவில் மட்டுமே காணப்படும் இந்தப் பறவை இனம் காணப்படுகிறது.

அழிவின் விளிம்பில் இருக்கும் குறித்த பறவையை பாதுகாப்பதற்காக சி.சி.எச் நிறுவனம் இயற்கை ஊக்குவிப்பு கழகம், டயலொக் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.08.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மாற்று தலைமை என்பதன் பொருள் என்ன?

ஜனநாயக அரசியலில் பல கட்சிகள் இருப்பதும் - பல நிலைப்பாடுகள் இருப்பதும் சாதாரணமான ஒன்று - அதேவேளை, அது தடுக்கவும் முடியாத ஒன்று. சர்வாதிகார அரசியல் சூழலில் மட்டும்தான் மாற்றுத் இருக்காது. ஈழத் தமிழர் அரசியல், தமிழ்த் தேசிய வடிவத்தை முன்னிலைப்படுத்திய காலத்திலிருந்து வேறுபாடான அரசியல் பார்வைகள் இருந்து வந்திருக்கின்றன. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஊடாக தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த எஸ். ஜே. வி. செல்வநாயகம், பின்னர் பொன்னம்பலம் தவறான அரசியல் பாதையில் பயணிக்கிறார் என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

அதை ஆரம்பிக்கின்றபோது தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இயக்கம் தேவை என்னும் வாதத்தை முன்வைத்திருந்தார். சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வைப் பெறுவதே தமிழ் அரசு கட்சியின் இலக்காக முன்னிறுத்தப்பட்டது. எனினும், அதனை ஒரு பாய்ச்சலில் அடைய முடியாது என்பதை அவர் அறிந்திருந்தாரென்றே அவர் பற்றிய பதிவுகள் கூறுகின்றன. இதன் காரணமாகவே, பண்டா - செல்வா பேச்சின்போது சமஷ்டியை விட்டு அதிகம் கீழிறங்கிச் சென்றார். அவ்வாறு சென்றால் மட்டும்தான் பண்டாரநாயக்கவுடன் பேச முடியும் என்னும் நிலைமை இருந்ததால்தான் அந்த முடிவை எடுத்தார். இவை அனைத்தும் வரலாறாகும்.

ஒரு கட்டத்தில் ஜனநாயக அரசியல் தலைமைகள் என்பவவை தமிழ்ச் சூழலில் முற்றிலுமாக செயலிழந்தன. இயக்கங்களே தமிழ் மக்களின் எதிர்காலம் என்னும் நிலைமை உருவாகியது. இயக்க மோதல்கள், சகோதரப் படுகொலைகள், ஜனநாயகத் தலைவர்கள்மீதான படுகொலைகள் என்று தொடர்ந்த தமிழர் அரசியலானது இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் ஒற்றை இயக்கத்தின் ஒரு முடிவுக்குள் வந்து சேர்ந்தது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் தமிழர் அரசியல் தலைகீழ் நிலைக்குச் சென்றது. முன்னர் நிராகரிக்கப்பட்ட அரசியல் தலைமைகளும் அதே அரசியல் அணுகுமுறைகளும் மீளவும் தமிழ் மக்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் நம்பிக்கைகளாகின.

கடந்த பதினாறு வருடங்களாக இந்த அடிப்படையில்தான் தமிழர் அரசியல் முன்னெடுக்கப்படுகிறது. எவ்வாறு செல்வநாயகம் அன்று, பொன்னம்பலம் தவறான பாதையில் பயணிக்கிறார் என்று கூறி வெளியேறினாரோ அதேபோன்றுதான் பல தசாப்தங்களுக்கு பின்னர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பேரன் கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறான பாதையில் பயணிப்பதாகக் கூறி ஒரு தனிப்பயணத்தை அறிவித்தார். அவரை நம்புபவர்கள் அவருடன் இருக்கின்றனர். ஆனாலும் மாற்று அரசியலில் அவரால் இன்றுவரை வெற்றிபெற முடியவில்லை - யாழ்ப்பாணத்துக்கு வெளியில் அவரால் செயல்பட முடியவில்லை.

ஒரு மாற்றுத் தலைமைக்கான ஆகக்குறைந்த முதிர்ச்சியையும் அர்ப்பணிப்பையும் அவர் இதுவரை காண்பிக்கவில்லை. முதலாவது ஒரு கட்சி தவறு என்றுகூறி பிறிதொன்றை அறிவித்தால் அதன் பின்னர் தவறானவர்களாக சித்தரிக்கப்பட்டவர்களை எங்களுடன் பேச வாருங்கள், நீங்கள் இணைந்து வராவிட்டால் தமிழ்த் தேசியம் அழிந்துவிடும் என்று கூறுவதானது ஒரு சரியான அணுகுமுறையல்ல.

தமிழ் அரசுக் கட்சி இணைந்து வராவிட்டால் தமிழ்த் தேசியம் அழிந்துவிடும் என்று இப்போது கூறும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்தல்லவா சம்பந்தனின் தவறுகளுக்கு எதிராகப் போராடியிருக்க வேண்டும்.

எனவே, தனிவழியில் செல்லும் முடிவை எடுத்துவிட்டால் அதன் பின்னர் மற்றவர்கள் தவறானவர்கள் என்பதை மக்களுக்கு புரிய வைத்து மக்களை வெல்வதில்தானே ஒரு மாற்றுத் தலைமையின் வெற்றி தங்கியிருக்கிறது. உண்மையில், இங்குள்ள அடிப்படையான பிரச்னை வேறு. அதாவது, போர் தோல்விக்கு பின்னரான தமிழர் அரசியலானது மீளவும் முன்னர் நிராகரிக்கப்பட்ட வழிமுறைக்கு செல்கிறது என்றால், அதன் அரசியல் பொருளை பலரும் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர். பழைய அரசியலுக்கு திரும்பினால் கைக்கொள்ள வேண்டிய மாற்று அணுகுமுறை என்பது முற்றிலும் யதார்த்தமானதாக இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறானதொரு மாற்றுத் தலைமை தொடர்பில் இன்றுவரையில் எவரும் சிந்திக்கவில்லை.

# இஸ்ரேலின் அறிவிப்பு காஸாவில் வன்முறையை மேலும் அதிகரிக்கும்

## இலங்கை அரசாங்கம் கவலை

கொழும்பு, ஓக. 11

இஸ்ரேலின் அறிவிப்பு காஸா பகுதியில் வன்முறையையும் மக்களின் துன்பத்தையும் மேலும் அதிகரிக்கச் செய்யும் செயலாகும் என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

காஸா பகுதியின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது தொடர்பான இஸ்ரேலின் தீர்மானம் குறித்து இலங்கை தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துவதாக வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் காஸா பகுதியில் வன்முறையை மேலும் அதிகரிக்கும். அந்தப் பகுதியில் உள்ள மக்களின் துன்பத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் செயலாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உடனடி போர் நிறுத்தத்துக்கு வருமாறு இலங்கை கேட்டுக்கொள்வதாகவும் அனைத்துத் தரப்பினரும் தங்கள் வேறுபாடுகளை இராஜதந்திர பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொண்டு நிலையான அமைதியை நிலைநாட்டுவதை நோக்கி நகர வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# நல்லை ஆதீனத்தில் தெய்வீகக் கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக. 11

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை தினமும் காலை 10. 00 மணிக்கு 'தெய்வீகக் கலை அர்ச்சனை' நிகழ்வை நடத்தி வருகிறது. அந்தவகையில் இன்று திங்கட்கிழமை சிறீநந்தகோபன் அணிகனின் கதாப்பிரசங்கம் நிகழ்வும் பகீரதி சுப்பிரமணியக் குருக்கனின் பக்திக் கானங்கள் நிகழ்வும் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார்.

(எ)

# நல்லூர் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரில் அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 11

நல்லூர் கந்தன் உற்சவ காலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் 14 ஆம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறும்.

வேதாந்த மடம் சிறீ சிவ குருநாத பீட 8 ஆவது குரு பீடாதிபதி வேதவித்தியா சாகரர் சுவாமிகள் திரு முன்னிலை வகிக்க வண்ணை சிறீ வரதராஜப் பெருமாள் ஆலயப் பிரதம குரு சிவசிறீ இராமலிங்க சர்மா ரமணீ தரக்குருக்களின் தலைமையில் இந்தத் திருக்கூட்ட நிகழ்வு நடைபெறும்.


இதில், வேலணைப் பிரதேச செயலக பதில் பிரதேச செயலாளர் கணேசமூர்த்தி பார்த்தீபன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் குமரேசன் பாலசண்முகன் சிறப்பு விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர், சைவப் புலவர் செ. கந்த. சத்தியதாசனும் கோப்பாய், சித்திர வேலாயுத சுவாமி, செல்லக் கதிர்காம அறநெறிப் பாடசாலை, பண்ணிசை ஆசிரியரும் ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியருமான திருமதி கமலராணி பாஸ்கரநாத சர்மாவும் வேலணை தீவகக் கல்வி வலய ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் தர்மலிங்கம் தர்மராஜாவும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகளை கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் ஆவரங்கால் நடராஜர் இராமலிங்கர் அறநெறிப் பாடசாலை, சிறுப்பிட்டி அண்ணமார் அறநெறிப் பாடசாலை, நீர்வேலி சிறீமுருகன் அறநெறிப் பாடசாலை, புத்தூர் சிவன் அறநெறிப் பாடசாலை, நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திரா அறநெறிப் பாடசாலை மற்றும் புத்தூர் கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்குவர்.

சிறப்பு நிகழ்வுகளாக, திருமதி சித்திரா ஹவிக்குமாரின் மாணவர்கள் வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வும் நுண்கலைமாணி திருமதி நிசாகரன் சைந்தவியின் மாணவர்கள் வழங்கும் வயலின் கச்சேரி நிகழ்வும் திருமதி சித்திரா ஹவிக்குமாரின் இசைக்கச்சேரி நிகழ்வும் நடைபெறும்.(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவீட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 11 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 26
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : துதியை




**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**இடபம்**
கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் பிறக்கும். நட்பு வட்டம் விரியும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். உத்தியோகத்தில் தானுண்டு தன் கவனம் தேவைப்படும்.

**கடகம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். வியா பாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**துலாம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். புது வேலை கிடைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உயரும் நாள்.

**விருச்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். புது வாய்ப்புகள் தேடி வரும். மனசாட்சி படி செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம். போராடி வெல்லும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொள்வீர்கள். மேலதிகாரி பாராட்டுவார்.

# சிந்துஜாவின் மரணம் தொடர்பில் கைதான மூவர் விளக்கமறியலில்

மன்னார், ஓக. 11

மன்னார் பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரியான இளம் குடும்பப் பெண்ணின் மரணத்துடன் தொடர்புடையதாக பணி நீக்கம் செய்யப்பட்ட மருத்துவர் உள்ளிட்ட ஐவரில் நேற்று முன்தினம் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சட்டத்தரணி பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த ஐவரில் தாதிய உத்தியோகத்தர் ஒருவரும் இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்களும் மன்னார் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்கள் மூவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபரான மருத்துவர் ஒருவரையும் தாதிய உத்தியோகத்தர் ஒருவரையும் கைது செய்ய உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இந்த நிலையில், குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

(எ)

# நாகதம்பிரான் ஆலயத்தில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 11

சிறுப்பிட்டி மேற்கு அருள் மிகு சிறீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு நாளை மறுதினம் 13 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் மாலை 06. 30 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. அந்தவகையில் சைவப் புலவர்கள் செ. த. குமரன், ச. முகுந்தன், க. கைலநாதன், பொன். சந்திரவேல் ஆகியோரும் இளஞ் சைவப்புலவர்கள் க. கயிலைவாசன், ச. நவநீதன், நித்திய பாபுதரன், த. தமோஜ்குமார் ஆகியோர்களின் சொற்பொழிவும் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ)

# குறிகட்டுவான் இறங்குதுறை அபிவிருத்தி குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக. 11

குறிகட்டுவான் இறங்குதுறையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று முன்தினம் குறிகட்டுவான் இறங்குதுறைக்கு துறைசார் அதிகாரிகளுடன் சென்று ஆய்வு மேற்கொண்டார். இதன்போது, அதிகாரிகளுக்கு ஆலோசனைகளையும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் உரிய அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.

மேலும், அமைச்சர் பிமலுடன் கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகரும் கலந்து ஆலோசனைகளை முன்வைத்திருந்தார்.

இதன்போது, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் குரூஸ், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர், நெடுந்தீவு பிரதேச செயலாளர், வேலணை உதவிப் பிரதேச செயலாளர், கடற்படை அதிகாரிகள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



(எ)

# புங்குடுதீவில் கரையொதுங்கிய படகு

**பொலிஸார் விசாரணை**

யாழ்ப்பாணம், ஓக. 11

புங்குடுதீவு கடற்கரை பகுதியில் ஆட்களற்ற நிலையில் மீன்பிடிப் படகொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 07.00 மணியளவில் கரையொதுங்கியுள்ளது.

மீன்பிடி வலைகளுடன் படகு கரையொதுங்கிய நிலையில் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (எ-05)




# பொன்னாலையில் வாளுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஓக. 11

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை பகுதியில் நேற்று முன்தினம் வாள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முதலியகோவில் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் வாளினை கையில் வைத்திருந்தவேளை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பழிவாங்கல் கைதுகள் அரசாங்கத்துக்கு எதிராக மாறும்

## மகிந்த ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஓக. 11

அரசியல் பழிவாங்கல்களை முன்னிலைப்படுத்தி இடம்பெறும் கைதுகள் அரசாங்கத்துக்கு எதிரானதாக அமையும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் நியமனம் தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அரசாங்கம் அரசியல் பழிவாங்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்குவது வெளிப்படையாகத் தெரிகிறது. இதற்கு சுயாதீன ஆணைக்குழுக்களை பயன்படுத்திக் கொள்கிறது. அரசியல் பழிவாங்கல்களை முன்னிலைப்படுத்தி இடம்பெறும் கைதுகள் அரசாங்கத்துக்கே



எதிரானதாக அமையும். மக்கள் மத்தியில் செயல்பாட்டு ரீதியிலான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள் - என்றார்.

(ஐ)

# தரமற்ற எரிவாயு அடுப்புகள் பறிமுதல் செய்யப்பட்டன

கொழும்பு, ஓக. 11

இறக்குமதி செய்து நாட்டில் பொருத்தப்பட்டதாகக் கூறப்படும் தரநிலைகளை பூர்த்தி செய்யாத 3 ஆயிரம் எரிவாயு அடுப்புகளை நுகர்வோர் விவகார அதிகார சபை பறிமுதல் செய்துள்ளது.

இந்த எரிவாயு அடுப்புகள் பாகங்களாக இறக்குமதி செய்யப்பட்டு, பொருத்தப்பட்டு சந்தைப்படுத்தப்படவிருந்த நிலையில் இவை கைப்பற்றப்பட்டன.


நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 3 ஆயிரம் அடுப்புகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டன.

இலங்கைக்குள் எரிவாயு அடுப்புகளை இறக்குமதி செய்யும்போது இறக்குமதி ஆய்வு நடைமுறைகளை பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும். இது இலங்கை தரநிலைகள் நிறுவனம் நிர்வகிக்கும் கட்டாய இறக்குமதி ஆய்வு திட்டத்தின் ஒரு பகுதியாகும், இது எரிவாயு அடுப்புகள் குறிப்பிட்ட தரம் மற்றும் பாதுகாப்பு தரங்களை பூர்த்தி செய்வதை உறுதி செய்கிறது.

இது இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு போன்ற காரணிகளின் அடிப்படையில் இணக்கத்தை மதிப்பிடுகிறது, மேலும் தொடர்புடைய தயாரிப்புகள் சந்தைக்கு வெளியிடப்படுவதற்கு முன்பு அத்தகைய இணக்க சான்றிதழ்கள் அல்லது சோதனைகள் கட்டாயமாகும்.

இந்த வர்த்தகர் கட்டாய இறக்குமதி ஆய்வுத் திட்டத்தைத் தவிர்த்து, முறையான தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்யாமல் பொருட்களை சந்தைக்கு விநியோகித்துள்ளமை ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(ஐ)



# இறங்குதுறையில் தீ பரவல் 4 மீன்பிடி படகுகள் நாசம்!

கொழும்பு, ஓக. 11

காலி மீன்பிடி இறங்குதுறையில் ஏற்பட்ட தீ விபத்தில் 4 படகுகள் எரிந்து முற்றாக நாசமாகின என்று தெரிய வருகிறது.

காலி மீன்பிடி இறங்குதுறையில் பயன்படுத்தப்படாத மீன்பிடி படகுகள் நிறுத்தப்படும் இடத்திலேயே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டது.

தீ பரவலையடுத்து, காலி மாநகர சபையின் தீயணைப்பு பிரிவு, கடற்படை, காலி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் மீனவ சமூகத்தினரும் இணைந்து தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

(ஐ)

# விபத்துகளில் மூவர் மரணம்

கொழும்பு, ஓக. 11

நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் மூன்று பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இந்த விபத்துகள் இடம்பெற்றன. மதவாச்சி பொலிஸ் பிரிவின் கெப்பிட்டிகொல்லாவ பகுதியில் நடந்து சென்றவரை வாகனம் ஒன்று மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். இதில், மதவாச்சியை சேர்ந்த 39 வயது நபர் ஒருவரே உயிரிழந்தார்.

படபொல பொலிஸ் பிரிவில் உடுவில, எத்கந்துர வீதியில் தொரல சந்திக்கு அருகில் சைக்கிள் ஒன்றை வாகனம் ஒன்று மோதியது. இதில், சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

வரகாபொல பொலிஸ் பிரிவில் கொழும்பு - கண்டி வீதியில் மாஹேனபாத சந்திக்கு அருகில் பாதசாரியை வான் ஒன்று மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 83 வயது நபரே உயிரிழந்தார்.

(ஐ)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஒரு தொன் வேர்க்கொம்பு சிக்கியது

இராமேஸ்வரம், ஓக. 11

இலங்கைக்கு கடத்தவிருந்த சுமார் ஒரு தொன் எடை கொண்ட வேர்க்கொம்பு (சுக்கு) தமிழ்நாட்டின் மண்டபம் பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அடுத்த வேதாளை கடற்கரையில் மண்டபம் கடலோர பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்ட போது இலங்கைக்கு கடத்துவதற்காக வாகனத்தில் கொண்டு வரப்பட்ட 35 மூட்டைகளில் இருந்த சுமார் ஒரு தொன் வேர்க்கொம்பு கைப்பற்றப்பட்டது.

வாகன சாரதி தப்பியோடிய நிலையில் வாகனத்தை கைப்பற்றிய கடலோர காவல் படையினர் அதனை மண்டபம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

(ஐ)



# நுரையீரல் புற்றுநோயாளர் நாட்டில் தொடர்ந்து உயர்வு

கொழும்பு, ஓக. 11

ஒவ்வோர் ஆண்டும் 3 ஆயிரம் வரையிலான நுரையீரல் புற்றுநோயாளர்கள் பதிவாகின்றனர் என்று வெலிசறை மார்பக புற்றுநோய் மருத்துவமனை மருத்துவ நிபுணர் சமன் இத்தல்மல்கொட தெரிவித்தார்.

மேலும், இது ஆண்களிடையே இரண்டாவது மிகவும் பொதுவான புற்றுநோயாக மாறியுள்ளது. அத்துடன் 2021ஆம் ஆண்டின் தரவுகளைக் கருத்தில் கொண்டால், நுரையீரல் புற்றுநோய் அவர்களின் முதல் 10 புற்றுநோய்களில் ஒன்றாகும்.

கடந்த 5-10 ஆண்டுகளில் நுரையீரல் புற்றுநோய் அதிகரித்து வருகிறது. இந்த அதிகரிப்பு ஆண்கள், பெண்கள் இருவரிடமும் பதிவாகியுள்ளது. இந்த நுரையீரல் புற்றுநோய்க்கு புகைபிடித்தல் ஒரு முக்கிய காரணியாகும்.

தற்போதைய ஆய்வு அறிக்கைகளின்படி, ஒருபோதும் புகைபிடிக்காதவர்களும் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, புகைபிடிப்பதில் நேரடியாக ஈடுபடாத பெண்களும் நுரையீரல் புற்றுநோய் தாக்கத்தால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

இது, நமது காற்றில் உள்ள காற்று மாசுபாட்டிற்கும் நமது வீடுகளில் உள்ள காற்றுக்கும் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கலாம்.

ஆண்டுதோறும் பதிவாகும் நுரையீரல் புற்றுநோய் நோயாளிகளின் எண்ணிக்கையை 2021 முதல் ஆம் ஆண்டு முதலான தரவுகளை கருத்தில் கொண் டால், ஆண்டுதோறும் 2,000-3,000 புதிய புற்றுநோயாளர்கள் பதிவாகின்றனர் - என்றார்.

(ஐ)

# அமைச்சரின் செயலர் போன்று பொலிஸாரிடம் நடித்தவர் கைது

கொழும்பு, ஓக. 11

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் செயலாளர் போன்று நடித்து மஹரகம பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பு எடுத்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹெரோயின் வைத்திருந்தமைக்காக மஹரகம பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவரை விடுவிப்பதற்காக சந்தேக நபர் இவ்வாறு அழைப்பு எடுத்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக விசேட விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, "பொலிஸார் எடுக்கும் எந்தவொரு கைதுகள் அல்லது நடவடிக்கைகளிலும் அமைச்சரோ அல்லது அமைச்சரின் பணிக்குழாமோ தேவையற்ற அழுத்தங்களையோ அல்லது தேவையற்ற தலையீட்டையோ மேற்கொள்ளாது", என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், "பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சரின் பெயரில் அல்லது அமைச்சின் பணிக்குழாம் என்ற பெயரில் எவரேனும் ஆள்மாறாட்டம் செய்தாலோ அல்லது பொலிஸ் நிலையங்கள் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு தேவையற்ற அழுத்தம் கொடுக்கப்பட்டாலோ அமைச்சுக்கு அறிவிக்குமாறும் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

(ஐ)

# ஜனாதிபதி அநுர அடுத்தமாதம் இரு நாடுகளுக்கு பயணமாவார்

கொழும்பு, ஓக. 11

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா ஐ. நா. பொதுச் சபை கூட்டத்துக்காக எதிர்வரும் செப்ரெம்பர் 23ஆம் திகதி நியூயோர்க் பயணமாகவுள்ளார். பின்னர், அங்கிருந்து ஜப்பான் பயணமாவார் என்று தெரிவிக்கப்பட்டது.

நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அமர்வுகளில் கலந்து கொள்ளும் அவர், அதன் பின்னர் ஜப்பானுக்கு அரசு முறை பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இதன்படி, ஜனாதிபதி செப்ரெம்பர் 23ஆம் திகதியன்று அமெரிக்காவுக்கு செல்வார். மறுநாள் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொது சபையில் உரையாற்றுவார். பொதுச் சபையின் கூட்டத்துக்கு புறம்பாக அவர் பல உலகத் தலைவர்களையும், சந்திக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நியூயோர்க்கிலிருந்து, 27 ஆம் திகதி ஜப்பானின் ஒசாகாவுக்குச் செல்லும் ஜனாதிபதி, அங்கு எக்ஸ்போ 2025 இல் கலந்து கொள்வார். இதைத் தொடர்ந்து 29ஆம் திகதி ஜப்பான் பிரதமர் சிகெரு இசிபாவை சந்தித்துக் கலந்துரையாடுவார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்பத்து பூங்காவில் சட்டவிரோத இல்மனைட் அகழ்வு நடவடிக்கை!

*** 20 ஏக்கரை ஆக்கிரமித்து மரங்கள் அழிப்பு**
*** கடநத அரசின் அமைச்சர் குழு பின்புலத்தில்?**
*** ரூ. 200 கோடி பெறுமதியான கருவிகள் சிக்கின**



கொழும்பு, ஓக. 11

**வில்பத்து தேசிய பூங்கா ஆரம்பிக்கும் பகுதியில் 20 ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத இல்மனைட் அகழ்வு சுரங்கத்தை வலானை ஊழல் தடுப்பு பிரிவு தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது.**

இந்த சட்டவிரோத நடவடிக்கையின் பின்புலத்தில் முன்னைய அரசாங்கத்தின் அமைச்சர் குழு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் நேரடி மேற்பார்வையின் கீழ் நேற்று முன்தினம் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பிரபல அரசியல்வாதிகள் குழு இந்த நடவடிக்கையின் பின்னணியில் இருந்ததா என்பதைக் கண்டறிய பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

இதனிடையே, இந்த சட்டவிரோத அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட 200 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதி வாய்ந்த இயந்திரங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

20 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட இந்த சட்டவிரோத நடவடிக்கையில் பல வருடங்கள் பழமையான பெறுமதியான மரங்கள் வெட்டப்பட்டிருப்பதும் தற்போது தெரியவந்துள்ளது.

இது வில்பத்து தேசிய பூங்காவின் தூண்டுதல் மண்டலத்திலிருந்து 500 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளதுடன், இந்த இடத்துக்கான நீர்விநியோகம் லுனு ஓயாவிலிருந்து பெறப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் நீர்த்தேக்கம் கட்டுவதற்கு தொல்பொருள் திணைக்களத்திடம் அனுமதி பெறப்பட்டாலும். அகழ்வு நடவடிக்கைகளுக்காக எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை. தொல்பொருள் பரிந்துரைகளை புறக்கணித்து, இரண்டு ஏக்கருக்கும் அதிகமான நிலத்தில் 20 அடிக்கும் மேல் ஆழத்தில் இங்கு ஒரு நீர்த்தேக்கம் கட்டப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந்த மோசடிக்கு பின்னால் முன்னாள் அமைச்சர்கள் இருக்கிறார்களா? என்பது குறித்து பொலிஸார் தற்போது விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அந்த இடத்தைப் பொறுப்பேற்ற வலானை ஊழல் தடுப்புப் பிரிவு பதில் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் அந்த இடத்தைப் பாதுகாக்க வனாத்தவில்லு பொலிஸ் அதிகாரிகள் குழுவை அனுப்ப நடவடிக்கை எடுத்தது.

இந்தத் திட்டம் தொடர்பான சமர்ப்பணங்கள் புத்தளம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று வலானை ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)



## போதை பாவனை அதிகமுள்ள பிரதேசங்கள் அடையாளம்!

கொழும்பு, ஓக. 11

கொழும்பில் போதைப்பொருள் பாவனை அதிகம் உள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இராஜகிரியவின் ஒபேசேகரபுர, பண்டாரநாயக்கபுர, வெல்லம்பிட்டி - கொலனாவை, பொரளையின் வனாத்த முல்ல, மொரட்டுவையின் லுனாவ, முகத்துவராம் பகுதியின் மட்டக்குளி ஆகிய பகுதிகள் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை அடையாளம் காண்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ், விசேட அதிரடிப் படை மற்றும் அரச நிறுவனங்களின் பங்களிப்பில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. (ஐ)

## ரயிலில் குழந்தையின் சடலம் விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 11

ரயில் ஒன்றில் குழந்தையின் சடலம் மீட்கப்பட்டது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுககப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - தெமட்டகொடையில் அரபு நாட்டோடு இணைக்கப்பட்ட கியூ. ஆர். குறியீடு பொறிக்கப்பட்ட பை ஒன்றிலிருந்து குழந்தையின் சடலம் கடந்த வாரம் மீட்கப்பட்டது.

இதையடுத்து, அன்றைய தினம் துறைமுகம், விமான நிலையம் வழியாக நாட்டுக்குள் வந்தவர்கள் தொடர்பில் பொலிஸார் தகவல்களை கோரியுள்ளனர்.

புத்தளம் - கொழும்பு இடையிலான அனைத்து ரயில் நிலையங்களிலிருந்தும் சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகளைப் பயன்படுத்தி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புத்தளத்திலிருந்து கொழும்புக்கு செல்லும் ரயிலின் கழிப்பறையில் பணியாளர் ஒருவரால் குழந்தையின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. (ஐ)

## சம்பளம் வழங்கியதில் ரூ. ஒரு கோடி மோசடி செய்த இருவருக்கு மறியல்!

கொழும்பு, ஓக. 11

பிரதேச சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கியதில் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை பிரதேச சபையின் அதிகாரி ஒருவரும் அவரின் சாரதியுமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் களுத்துறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 22ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை பிரதேச சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும்போது ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டனர். களுத்துறையை சேர்ந்த 45, 54 வயது நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

களுத்துறை பிரதேச சபை அதிகாரி ஒருவர் அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து நீண்ட விசாரணைகளின் பின்னர் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## 907 பேர் கைது!

கொழும்பு, ஓக. 11

நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் காலை வரை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் போதைப்பொருள் சார் குற்றங்களுடன் தொடர்புடைய 907 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில், 17 பேர் நேரடி ஆதாரங்களுடன் கைது செய்யப்பட்டனர். அத்துடன், பல்வேறு குற்றங்களுக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 343 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சோதனை நடவடிக்கையின் போது இரண்டு சட்டவிரோத துப்பாக்கிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அத்துடன், மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 58 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும், கவனக் குறைவாக வாகனம் செலுத்துதல் உள்ளிட்ட பல்வேறு போக்குவரத்து குற்றச்சாட்டுக்களின் கீழ் 2 ஆயிரத்து 992 நபர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், பூஸா சிறைச்சாலையில் நடத்தப்பட்ட சோதனையில் 8 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. அத்துடன், ஒரு கிலோ 547 கிராம் ஹெரோயின், 726 கிராம் 107 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பவையும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தப்பிச் செல்ல முயன்ற கைதி கால், கை முறிந்தநிலையில்!

கொழும்பு, ஓக. 11

பதாள உலகக் குழுவை சேர்ந்தவர் என்று கருதப்படும் வலஸ் கட்டா என அழைக்கப்படும் திலின சம்பத் பொலிஸாரை தாக்கிவிட்டு தப்பியோட முயன்றநிலையில் கால்களும், கையும் முறிந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்பு பிரிவினரால் 90 நாட்கள் தடுப்பு காவலில் வைத்து வலஸ் கட்டா விசாரிக்கப்படுகிறார்.

இவர் நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் கழிப்பறைக்கு செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார். கைவிலங்கு கழற்றப்பட்டு 4 பொலிஸாரின் பாதுகாப்பில் அவர் கழிப்பறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இடையில் அதிகாரிகளை தாக்கிவிட்டு அவர் மூன்றாவது மாடியில் இருந்து குதித்தார் என்று கூறப்படுகிறது. இதில், அவரின் கால்கள் முறிந்ததுடன், கை ஒன்றின் முழங்கை பகுதியும் முறிந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் பலத்த பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

## 40 ஆயிரம் இந்தியர்கள் 5 நாட்களில் வருகை!

கொழும்பு, ஓக. 11

இந்த மாதத்தின் முதல் ஐந்து நாட்களில் 40 ஆயிரத்து 47 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நடப்பு ஆண்டின் குறித்த காலப்பகுதி வரையில் மாத்திரம் 14 இலட்சத்து 8 ஆயிரத்து 335 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. இவர்களில் அதிகளவானோர் இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்கள் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பிரித்தானியா, சீனா, பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலா பயணிகள் வருகைத்தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## பாலத்திலிருந்து கீழே விழுந்து வான் விபத்து

கொழும்பு, ஓக. 11

பழுதுபார்க்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த பாலத்திலிருந்து கீழே விழுந்து வான் விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

குருநாகலில் மரதகஹமுல - திவுலபிட்டி வீதியில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், காயமடைந்த சாரதி திவுலபிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாரதிக்கு நித்திரை கலக்கம் ஏற்பட்டமையால் இந்த விபத்து ஏற்பட்டதாக திவுலபிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமக்கு பலனில்லாமல் ராஜபக்ஷக்கள் நாட்டுக்கு நன்மை செய்யமாட்டார்கள்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஓக. 11

“தங்களுக்குப் பலன் இல்லாமல் ராஜபக்ஷ குடும்பம் நாட்டுக்கு ஏதாவது நன்மை செய்யாது”, என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டுக்கு அதிகளவான வருமானம் கிடைத்திருந்தால் சம்பந்தப்பட்ட தரப்பினர் மௌனமாக இருப்பது சாத்தியமற்ற விடயம்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

சுப்ரீம் செட் செயற்கைக் கோள் ஊடாக நாட்டுக்கு வருமானம் கிடைத்திருந்தால் ராஜபக்ஷ குடும்பம் 13 வருடங்களாக அமைதியாக இருந்திருக்க மாட்டார்கள். தங்களுக்குப் பலன் இல்லாமல் ராஜபக்ஷ குடும்பம் நாட்டுக்கு ஏதாவது நன்மை செய்யாது. எது எவ்வாறாயினும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

விசாரணைகளின் முடிவில் என்ன நடந்தது என்பது பற்றி அரசாங்கம் அறிவிக்கும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# பலஸ்தீனம் - இஸ்ரேல் போர் மனிதபேரழிவாக மாறியுள்ளது

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஓக. 11

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான அதிகாரப் போர் தற்போது மனிதப் பேரழிவாக உருவெடுத்து வருகிறது. இந்தப் பேரழிவைத் தடுப்பதற்கு அகிம்சை மாத்திரமே ஒரே வழியாகும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

காஸாவை இஸ்ரேல் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளமை தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் யாருடைய வரலாறு அதிக பலம் கொண்டது என்பது பற்றிய விவாதத்துக்கு அப்பால் இது ஒரு மனித பேரழிவாக மாறி விட்டது.

இந்தப் பேரழிவைத் தடுப்பதற்கு அகிம்சை மட்டுமே ஒரே வழி வேறு வழியில்லை. பிரதேசம் அல்லது வளங்களை வெல்வதை விட, நமது மனிதநேயத்தை இழப்பது குறித்து நாம் மிகவும் கவலைப்பட வேண்டும். நாம் அதை இழந்தால், எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# தகவல் அறியும் உரிமை குழுவின் தலைவராக தயா லங்காபுர நியமனம்

கொழும்பு, ஓக. 11



தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தலைவராக மூத்த பத்திரிகையாளர் தயா லங்கபுர நியமிக்கப்பட்டுள்ளார்.


அரசமைப்பு சபையின் ஒப்புதலுக்குப் பிறகு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மூத்த பத்திரிகையாளரான தயா லங்காபுர 60 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தத் துறையில் பணியாற்றி வருகிறார். தற்போது அவர் ரது இர (சுயவார ஜசய) சிங்கள வாரப் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இன்று திங்கட்கிழமை தனது பொறுப்புகளை அவர் ஏற்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி தலைமையில் ஆதிவாசிகள் தின நிகழ்வு

கொழும்பு, ஓக. 11



உலக ஆதிவாசிகள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தம்பான ஆதிவாசி அருங்காட்சியக வளாகத்தில் இடம் பெற்றது.

பல்வேறு அரச, தனியார் நிறுவனங்கள் இணைந்து தேசிய ஆதிவாசிகள் தின கொண்டாட்டத்தை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தன. அத்துடன், அமைதி மற்றும் சுபீட்சத்திற்காக ஆசீர்வதிக்கப்பட்ட பாரம்பரிய “கிரி கொரஹா” சம்பிரதாயம் உட்பட ஆதிவாசிகளின் தனித்துவமான பல்வேறு கலாசார அம்சங்களுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, முன்னாள் ஆதிவாசிகள் தலைவர் ஊருவரிகே திஸஹாமியின் உருவச்சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தியதோடு இந்த வைபவம் தொடங்கியது டன், அருங்காட்சியக வளாகத்தில் ஜனாதிபதி, வெள்ளை சந்தன செடியையும் நட்டார்.

இலங்கையின் பிரதான ஆதிவாசியினத் தலைவரான, வனஸ்பதி ஊருவரிகே வன்னியலெத்தோ, ஆதிவாசியினரின் பிரச்னைகள் அடங்கிய மனுவை ஜனாதிபதியிடம் கையளித்ததுடன், நினைவுப் பரிசொன்றையும் வழங்கி வைத்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் ஆதிவாசியின தலைவருக்கு அன்பளிப்பும் வழங்கி வைக்கப்பட்டது.

ஆதிவாசியின சமூகத்தினரின் உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக விற்பனை கூடங்கள் நிர்மாணித்தல் மற்றும் பாரம்பரிய அறிவு மற்றும் தேசிய வளங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் இலங்கையில் முதல் ஆதிவாசி மூலிகை சவர்க்காரம் “கைரி” அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஆயுள்வேத சவர்க்கார தயாரிப்பு பயிற்சியை நிறைவு செய்த ஆதிவாசியின பெண்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி உள்ளிட்ட அமைச்சர்கள், அரச அதிகாரிகள், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனடிய உயர் ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)



# இந்தியாவுடனான கலாசார உறவு; அரசியல் தலைவர்கள் பங்கேற்பு

கொழும்பு, ஓக. 11

இந்திய அரசு, இந்திய வெளிவிவகார அமைச்சு, இந்திய கலாசார உறவுகளுக்கான சபை என்பன இணைந்து இலங்கையின் 14 அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் அரசியல் தலைவர்கள் 24 பேருக்கு இந்தியாவின் பொருளாதாரம், கல்வி, தொழில்நுட்பம் மற்றும் கலாசார உறவுகள் போன்ற பல்வேறு துறைகளில் அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை அண்மையில் வழங்கியது.

இந்த வாய்ப்பைப் பெற்று இந்தியாவிற்கு சென்று திரும்பியவர்கள் தமது அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்து கொண்டனர். இந்திய உயர்ஸ்தானிகராலயம் நடத்திய இந்த நிகழ்வில் 14 அரசியல் கட்சிகளை சேர்ந்த முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர். (ஐ)

# அருண மீதான நம்பிக்கையில்லா பிரேரணை:

# விவாதத்தில் ஈஸ்டர் தாக்குதல் குறித்த பல விடயங்கள் வெளிப்படுத்தப்படும்!

கொழும்பு, ஓக. 11

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் இது வரை வெளிப்படுத்தப்படாத பல விடயங்கள் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தப்படும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணை இன்று திங்கட்கிழமை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நம்பிக்கையில்லா பிரேரணைக்கு இரண்டு நாட்கள் அவகாசம் கோரியுள்ளதாகவும் இந்த விவாதத்தை விரைவில் நடத்துமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் முஜிபுர் ரஹ்மான் கூறினார்.

அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும், இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளனர். எதிர்க்கட்சிகளில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இதில், மிகுந்த ஆர்வத்துடன் பணியாற்றி வருகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து அரசாங்கம் நியாயமான விசாரணையை நடத்த வேண்டுமானால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுவது அவசியம் - என்றும் முஜிபுர் ரஹ்மான் மேலும் கூறினார். (ஐ)

# இலங்கையின் மசாலா பொருட்களுக்கு 'மவுசு'

கொழும்பு, ஓக. 11

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மசாலா பொருட்களுக்கு உலக சந்தையில் அதிக கேள்வி நிலவுவதாகக் கூறப்படுகிறது.

இதனடிப்படையில், கடந்த ஆண்டு 88 கோடியே 87 இலட்சம் ரூபாய் பெறுமதியான மிளகு, கறுவா என்பன இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

உலக நாடுகளில் இலங்கையின் மிளகு, கறுவாவுக்கு அதிக கேள்வி நிலவுகிறது. எனினும், உள்நாட்டில், உரிய விலைக்கு இவற்றை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

# லொஹான் மருத்துவமனையில்

கொழும்பு, ஓக. 11

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சத்திர சிகிச்சை ஒன்றுக்காகவே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிய வருகிறது. அவர் பல மாதங்களாகக் கல்லீரல் தொடர்பான நோய்க்கு சிகிச்சை பெற்று வந்திருந்த நிலையில், அவருக்கு தற்போது சத்திரசிகிச்சை செய்ய பட்டுள்ளதாக (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டு. பிரதேச செயலக சிக்கல்களுக்கு தமிழ் - முஸ்லிம்கள் இணைந்து தீர்வு

## மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார் அமைச்சர் சந்தன

கொழும்பு, ஓக. 11

**மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலக பிரிவின் எல்லை மற்றும் நிர்வாக சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்கு கிழக்கு மாகாண தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் பொது இணக்கப்பாட்டுடன் செயல்பட முன்வந்துள்ளமையையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். பேச்சுவார்த்தை ஊடாக இந்த பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு எடுத்துள்ள தீர்மானத்தை வரவேற்கிறேன் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.**

2012 மற்றும் 2021ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நடைபெற்ற எல்லை நிர்ணயக்குழுவின் விதந்துரைகளை மீளாய்வு செய்து விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்கான புதிய எல்லை நிர்ணயக்குழுவொன்றை நியமிக்க அமைச்சரவையால் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரம் தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பாராளுமன்ற அமர்வின் போது கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேச செயலக பிரச்னை மற்றும் புதிய எல்லை நிர்ணய குழு நியமனத்துக்காக அமைச்சரவையால் வழங்கப்பட்ட அனுமதி குறித்து பேசியிருந்தார்கள். இவ்விடயம் தொடர்பில் விரிவான தெளிவுபடுத்தலை வழங்குவது அவசியமாகும்.


மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலக பிரிவுகள் உள்ளன. இதில் 12 பிரதேச செயலக பிரிவுகள் வர்த்தமானி அறிவித்தலால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் கோறளைப்பற்று மத்தி, தெற்கு (கிரான்) பிரதேச செயலக பிரிவுகள் இரண்டும் இதுவரையில் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பிரகடனப்படுத் தப்படவில்லை.

1999ஆம் ஆண்டு அப்போதைய அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கமைய 6 மாவட்டங்களுக்கு புதிய 08 பிரதேச செயலகங்களை அமைப்பதற்காக 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

இந்த அமைச்சரவை தீர்மானத்துக்கமைய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்ட 08 பிரதேச செயலகங்கள் செயல்படுகின்ற நிலையில் அதில் அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச செயலகம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மத்தி மற்றும் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகங்களை தவிர்த்து ஏனைய பிரதேச செயலகங்கள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று பிரதேச செயலக விவகாரத்தில் காணப்பட்ட பிரச்னைகளுக்கு 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் எடுத்த முயற்சிக்கு அப்பகுதியில் எதிர்ப்பு தோற்றம் பெற்றது. இப்பகுதியின் எல்லை பகுதிகளுக்கு தீர்வு காண்பதற்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துள்ளன. பிரச்னைகளுக்குத் தீர்வு காண முற்படும் போது அது இன முரண்பாட்டை தோற்றுவித்து விடக்கூடாது என்பதில் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

இந்த பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு கிழக்கு மாகாண தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் பொது இணக்கப்பாட்டுடன் செயல்பட முன்வந்துள்ளமையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். பேச்சுவார்த்தை ஊடாக இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு எடுத்துள்ள தீர்மானத்தை வரவேற்கிறேன்"- என்றார். (எ)



# சாய்ந்தமருதில் இரத்ததான முகாம்

சாய்ந்தமருது, ஓக. 11

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்துக்கு முன்பாகவுள்ள சுகாதார நிலையத்தில் நேற்று முன்தினம் இரத்ததான முகாம் நடைபெற்றது.

எஸ். பி. பௌண்டேஷன், ரியல் ப்ளாஸ்டர் விளையாட்டுக் கழகம் மற்றும் சிறிலங்கா யுனைட்ஸ் ஆகிய அமைப்பினர் இணைந்து ஏற்பாடு செய்த இந்த உயிர்காக்கும் உயரிய பணியில் பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர். (எ)

# சமஷ்டி அரசியல் தீர்வு வேண்டும் திருகோணமலையில் போராட்டம்



திருகோணமலை, ஓக. 11

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் நடைமுறைப் படுத்தப்படும் 100 நாள் செயன்முனை வின் 10 ஆவது நாள் நிகழ்வு நிகழ்வு நேற்று திருகோணமலை மாவட் டத்தின் குச்சவெளி பிர தேசத்துக்குட்பட்ட திரி யாய் கிராமத்தில் நடைபெற்றது.

பல வழிகளிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட திரியாய் மக்கள் தொடர்ந்தும் நில அபகரிப்புக்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில், நேற்றைய தினம் அங்கு கூடிய மக்கள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத அதிகாரப் பகிர்வுடன் கூடிய சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு வழங்க வலியுறுத்தினர். (எ)

# ஆயுத உதிரிப்பாகங்கள் 5 கைக்குண்டுகள் மீட்பு



திருக்கோவில், ஓக. 11


ஆற்றுப் பகுதியில் மரம் ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 5 கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்களின் உதிரிப் பாகங்களை திருக்கோவில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வம்மியடி பகுதியில் நேற்று முன் தினம் சனிக்கிழமை குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 5 கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்களின் உதிரிப் பாகங்கள் இவ்வாறு மீட்கப்பட்டன.

அத்துடன் யுத்த காலங்களில் இப்பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம் இருந்ததாகவும் மேலும் பல ஆயுதங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)





# பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு, பரிசோதனைகள்

கல்முனை, ஓக. 11

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2025ஆம் ஆண்டுக்கான அரையாண்டு அணிவகுப்பு மரியாதை மற்றும் பரிசோதனை நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்முனை உவெஸ்லி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அஸார் பங்குபற்றலுடன் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி. எச். கலனசிறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக்கொண்டார்.

தொடர்ந்து பொலிஸ் பிரிவு வாகனங்களின் பேரணி ஆரம்பமானது. மேலும் காலை முதல் மாலை வரை பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவைப்பிரிவு நிலையங்கள், சுற்றுச்சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகள் என்பனவற்றைப் பார்வையிட்டதுடன், பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

இந்த நிகழ்வில் சவளக்கடை, பெரியநீலாவணை, சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொலிஸாரும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-01)

# பிள்ளையானின் கடிதம் குறித்து முதல்வரிடம் சி.ஐ.டி. விசாரணை

மட்டக்களப்பு, ஓக. 11

மட்டக்களப்பு மாநகர சபை முதல்வருக்கு புனர் நிர்மாணிக்கப்பட்ட பொது நூலகத்தை திறந்து மக்கள் பாவனைக்கு விடுமாறு சிறையில் இருக்கும் பிள்ளையான் அனுப்பிய கடிதம் தொடர்பில் மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதனிடம் சி.ஐ.டி. யினர் விசாரணை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தலைவருமான சி. சந்திரகாந்தன் (பிள்ளையான்) முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பில் கடந்த ஏப்ரல் ஆம் திகதி சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி பிள்ளையான் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் மட்டு. மாநகர சபை முதல்வருக்கு, மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் புனர்நிர்மாணிக்கப்பட்ட நூலகத்தை மக்கள் பாவனைக்கு கையளிப்பது தொடர்பாக என தலைப்பிடப்பட்டு அதில் கையொப்பம் இட்டு கடிதம் ஒன்றை கட்சி உறுப்பினர் ஒருவர் மாநகர சபை முதல்வரிடம் ஒப்படைத்துள்ளார்.

பிள்ளையான் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சி.ஐ.டியின் கீழ் இருக்கும் போது கடிதம் ஒன்று வெளிவந்ததுடன் அது பேஸ்புக்கில் பகிரப்பட்ட நிலையில் சம்பவதினமான சி.ஐ.டியினர் மாநகர சபைக்கு சென்று மாநகர சபை முதல்வரிடம் இந்த கடிதம் தொடர்பான விசாரணை ஒன்றை மேற்கொண்டு சென்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா நகரத்தை கைப்பற்றும் இஸ்ரேலின் முடிவு ஆபத்தானது

## ஐ. நா. பொதுச் செயலாளர் எச்சரிக்கை

ஜெனீவா, ஒக. 11

**காஸா நகரத்தை முழுமையாக கைப்பற்றும் இஸ்ரேலின் முடிவு, பலஸ்தீனியர்களின் நிலைமையை மேலும் மோசமாக்கும் - ஆபத்தான ஆக்கிரமிப்பு என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் எச்சரித்துள்ளார்.**



காஸாவை முழுமையாகக் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு முன்மொழிந்த முடிவுக்கு அந்த நாட்டு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கு பல முனைகளில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. சீனா, துருக்கி, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் வெளியிட்ட அறிக்கையில், "இஸ்ரேல் அரசாங்கம் காஸா நகரத்தை முழுமையாக கைப்பற்றும் முடிவால் நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். இந்த முடிவு ஆபத்தான ஆக்கிரமிப்பு ஆகும். ஏற்கனவே பேரழிவில் சிக்கியுள்ள இலட்சக்கணக்கான பலஸ்தீனியர்களின் வாழ்வை இது மேலும் ஆபத்தில் ஆழ்த்தும். மீதமுள்ள பணயக்கைதிகள் உட்பட மேலும் பல உயிர்களுக்கு இது ஆபத்தை விளைவிக்கும்.

காஸா நகரத்தைக் கைப்பற்றும் இஸ்ரேலின் திட்டம் பொது மக்கள் மற்றும் பணயக்கைதிகளுக்கு அச்சத்தைத் தூண்டுகிறது. காஸாவில் உள்ள பலஸ்தீனியர்கள் தொடர்ந்து பயங்கரமான பேரழிவை சந்தித்து வருகின்றனர். நிரந்தர போர் நிறுத்தம், காஸா முழுவதும் தடையற்ற மனிதாபிமான உதவிகள் மற்றும் அனைத்து பணயக் கைதிகளையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் விடுவித்தல் ஆகியவற்றை உடனே செய்ய வேண்டும். சர்வதேச சட்டத்துக்கு இஸ்ரேல் கீழ்ப்படிய வேண்டும்.

இந்த சட்டவிரோத ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வராமல், இந்த மோதலுக்கு நிலையான தீர்வு கிடைக்காது. காஸா பலஸ்தீன அரசின் ஒருங்கிணைந்த பகுதியாகும். அது அவ்வாறே தொடர்ந்து இருக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார்.

(எ)

# எந்த போர் விமானங்களும் சுட்டு வீழ்த்தப்படவில்லை

## பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர்

இஸ்லமாபாத், ஒக. 11

எந்த போர் விமானங்களும் சுட்டு வீழ்த்தப்படவில்லை என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் தெரிவித்தார்.

காஷ்மீர் பஹல்காமில் கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கு பழிவாங்கும் நோக்கத்தில் இந்தியா கடந்த மே மாதம் 7ஆம் திகதி ஒப்ரேஷன் சிந்தூர் என்ற பெயரில் பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தியது.

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. மேலும் பயங்கரவாதிகளும் இந்தியாவின் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதல் நான்கு நாட்கள் நீடித்தது. இதன்பிறகு இருநாடுகள் இடையேயும் போர் நிறுத்தம் ஏற்பட்டது.

இந்தியா - பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தியது பற்றி அவ்வப்போது புதுப்புது தகவல்கள் வெளியாகி வருகின்றன. அந்த வகையில் இந்த சண்டையின் போது பாகிஸ்தானின் 6 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக இந்திய விமானப் படை தலைமை தளபதி அமர் பிரித் சிங் கூறியுள்ளார். இந்த நிலையில், பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

"இந்திய தரப்பிலிருந்து பாகிஸ்தானின் ஒரு விமானம் கூட சுட்டு வீழ்த்தப்படவோ அல்லது தாக்கப்படவோ இல்லை. இந்திய விமானப்படை தரப்பிலிருந்து கால தாமதமாக தெரிவிக்கப்பட்டு இருக்கும் தகவல் நம்பும் படியாக இல்லை. உண்மை தெரிய வேண்டுமாயின், இரு தரப்பிலிருந்தும் விமானப்படை தளவாடங்களை சுதந்திரமாக ஆய்வு செய்திட அனுமதிப்போம்"- என்றார். (எ)

### இந்தியா மீது 50 சதவீதம் வரி

# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு ஜனநாயகக்கட்சி எம். பி. எதிர்ப்பு

வாஷிங்டன், ஒக. 11

ரஷ்யாவுடனான எண்ணெய் வர்த்தகத்தை எதிர்த்து, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50 சதவீத வரியை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ளார். இதனால், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வரி மோதல் சூடு பிடித்துள்ளது. அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பு துரதிர்ஷ்டவசமானது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவுக்கு 50 சதவீத வரியை விதித்தற்காக அமெரிக்காவில் எதிர்க்கட்சியாக செயல்படும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த எம்.பி. கிரெகோரி மீக்ஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: "இந்த வரி விதிப்பு இந்தியாவும் அமெரிக்காவும் பல ஆண்டுகளாக கட்டி எழுப்பி வந்த உறவை ஆபத்தில் ஆழ்த்துகிறது. இந்த கூடுதலான வரி விதிப்புகள் இந்தியா, அமெரிக்கா இடையிலான நீண்ட கால உறவை மிகவும் பாதிக்கும்.

எந்தவொரு பிரச்னையையும் பேச்சுவார்த்தை முறையிலோ அல்லது மரியாதைக்குரிய முறையிலோ தீர்க்கப்பட வேண்டும். ஆனால், கடந்த வாரம் 25 சதவீத வரியை விதித்த ட்ரம்ப், இந்த வாரத்தில் கூடுதலாக 25 சதவீத வரியை இந்தியா மீது விதித்துள்ளார். இந்த வரிவிதிப்புகள் மிகவும் அதிகமாகும். இது சரியல்ல"- என்றார்.

(எ)

# உக்ரைன் போர் நிறுத்தம் பற்றி பேச ட்ரம்ப் - புடின் 15ஆம் திகதி சந்திப்பு

நியூயோர்க், ஒக. 11

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் - ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எதிர்வரும் 15ஆம் திகதி அலாஸ்காவில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர். அப்போது ரஷ்யா - உக்ரைன் போரை முடிவு கொண்டு வருவது தொடர்பான அமைதி பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புடினின் எச்சரிக்கையையும் மீறி, நேட்டோவுடன் இணைந்து செயல்பட்டதால் உக்ரைன் மீது கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி போரை தொடங்கினார் புடின். அமைதியை ஏற்படுத்த பல நாட்டு தலைவர்கள் எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிந்ததால் போர் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இதில் மத்தியஸ்தராக இருந்து பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளார். அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்து அவர் அமைதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இந்தத் தகவலை வால் ஸ்டிரீட் ஜர்னல் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

'கிழக்கு உக்ரைன் பகுதியில் இருந்து உக்ரைன் படைகள், நேட்டோ படைகள் வெளியேற வேண்டும். அப்படி செய்தால் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொள்கிறேன்' என்று புடின் கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. போரை நிறுத்துவதற்கு, கிழக்கு உக்ரைனை ரஷ்யா கேட்கிறது. அத்துடன் அந்தப் பகுதியை சர்வதேச நாடுகள் ரஷ்யாவுக்கானதாக அங்கீகரிக்க வேண்டும் என்று ஐரோப்பிய தலைவர்கள், உக்ரைன் அதிகாரிகள் கூறியதாகவும் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

இதுகுறித்து ட்ரம்ப் கூறும்போது, "எந்தவொரு சமாதான ஒப்பந்தமும் பிரதேச மாற்றங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். ஆனால், சில பகுதிகளை நாங்கள் திரும்பப் பெறுவோம். சில பகுதிகள் மாறலாம். அது இரு தரப்புக்கும் நன்மை தருவதாக இருக்கும். என்னைப் பொருத்தவரை புடின் அமைதியை விரும்புவதாக நம்புகிறேன்" என்று தெரிவித்தார். 'புடினை சந்திக்க மிகுந்த ஆவலுடன் இருக்கிறேன். அலாஸ்காவில் இந்த சந்திப்பு 15ஆம் திகதி நடைபெறும்' என்று சமூக வலைத்தளத்திலும் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார்.

ஜெனீவாவில் அமெரிக்கா - ரஷ்யா மாநாடு கடந்த 2021இல் நடந்தபோது, அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் ரஷ்ய ஜனாதிபதி புடினும் சந்தித்து பேசினர். இதன்பிறகு ரஷ்ய ஜனாதிபதி புடினை தற்போது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சந்தித்து அமைதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (எ)

# இஸ்ரேலுக்கு இனிமேல் ஆயுத ஏற்றுமதி இல்லை

## முற்றாக நிறுத்தியது ஜேர்மனி

பெர்லின், ஒக. 11

இஸ்ரேலுக்கான அனைத்து ஆயுத ஏற்றுமதிகளையும் ஜேர்மனி நிறுத்தியுள்ளது.

காஸா நகரை முழுமையாக கைப்பற்றும் திட்டத்துக்கு இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்தே ஜேர்மனி இது குறித்து அறிவித்துள்ளது.

இந்தச் சூழ்நிலைகளின் கீழ் காஸா பள்ளத்தாக்கில் எதிர்காலத்தில் பயன்படுத்தக்கூடிய எந்த இராணுவ ஏற்றுமதிக்கும் ஜேர்மனி அனுமதியளிக்காது என ஜேர்மன் சான்சிலர் பிரெட்ரிச் மேர்ஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு தன்னை பாதுகாப்பதற்கான உரிமையை ஆதரிப்பதாக தெரிவித்துள்ள அவர் ஹமாஸ் தனது பிடியில் உள்ள பணயக்கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுமக்களின் உயிரிழப்புகள் அதிகரிப்பதை இதற்கு மேலும் ஜேர்மனியால் சகித்துக்கொள்ள முடியாது. காஸா பள்ளத்தாக்கில் மேலும் கடுமையான நடவடிக்கைகளுக்காக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை வழங்கியுள்ள அனுமதி காரணமாக இந்த இலக்குகள் எப்படி நிறைவேறப்போகின்றன என்பது தெரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ட்ரம்புக்கு நோபல் பரிசு: கம்போடியாவும் ஆதரவு

புனோம் பென், ஒக. 11

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசை வழங்க வேண்டும் என்று கம்போடியா பிரதமர் பரிந்துரைத்துள்ளார். நோர்வே நோபல் குழுவுக்கு கம்போடியா பிரதமர் ஹுன் மானெட் கடிதம் எழுதியுள்ளார். அதில், "உலக அமைதியை நிலைநாட்டுவதில் ட்ரம்பின் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட வேண்டும்.

பல நாடுகள் இடையே ஏற்பட்ட மோதல்களுக்கு தீர்வு கண்டதுடன், பேரழிவு தரும் போர்களை ட்ரம்ப் தடுத்துள்ளார். கம்போடியாவுக்கும் தாய்லாந்துக்கும் இடையே நிபந்தனையற்ற போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதில் ட்ரம்ப் முக்கிய பங்காற்றினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா உடனான போரை நிறுத்த ட்ரம்ப் உதவியதாக கூறும் பாகிஸ்தான், அதற்காக அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என்று கடந்த ஜூன் மாதம் பரிந்துரைத்தது. ஈரான் உடனான போரை முடிவுக்கு கொண்டு வந்ததற்காக நோபல் விருதுக்கு ட்ரம்ப்பை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த மாதம் பரிந்துரைத்தார். அந்த வரிசையில் இப்போது கம்போடியா பிரதமரும் இணைந்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து இன்னிங்ஸ் வெற்றி

புலவாயோ, ஓக. 11

சிம்பாவேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் வெற்றி பெற்றது. அத்தோடு, தொடரையும் கைப்பற்றியது.


நியூசிலாந்து கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி புலவாயோவில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பாட்டம் செய்த சிம்பாவே அணி 125 ஓட்டங்களுக்கு சுருண்டது. பின்னர் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து அணி தொடக்க நாளில் ஒரு விக்கெட் இழப்புக்கு 174 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டெவான் கொன்வே 79 ஓட்டங்களுடனும் ஜேக்கப் டப்பி 8 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த நிலையில் 2ஆவது நாளன்று நியூசிலாந்து வீரர்கள் முழுமையாக ஆதிக்கம் செலுத்தினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கொன்வே தனது 5ஆவது சதத்தை நிறைவு செய்தார். மறுமுனையில் டப்பி 36 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய ஹென்றி நிகோல்ஸும் நிலைத்து நின்று அசத்தினார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 345-ஐ எட்டிய போது கொன்வே 153 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து 4ஆவது விக்கெட்டுக்கு நிகோல்ஸுடன் ரச்சின் ரவீந்திரா கைகோர்த்தார். இருவரும் சிம்பாவே பந்து வீச்சை துவம்சம் செய்து ஓட்டமழை பொழிந்தனர். 7 பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்தி பார்த்தும் இவர்களை சிம்பாவேயால் கட்டுப்படுத்த முடியவில்லை. நிகோல்ஸ் தனது 10ஆவது சதத்தையும் ரச்சின் ரவீந்திரா 3ஆவது சதத்தையும் பதிவு செய்தனர்.

2ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 130 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 601 ஓட்டங்கள் குவித்திருந்தது. ஹென்றி நிகோல்ஸ் 150 ஓட்டங்களுடனும் ரச்சின் ரவீந்திரா 165 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். நியூசிலாந்து அணி 476 ஓட்டங்கள் முன்னிலை பெற்று வலுவான



நிலையில் இருந்தது.

இத்தகைய சூழலில் 3ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது. ஆட்டம் தொடங்குவதற்கு சிறிது நேரத்துக்கு முன் நியூசிலாந்து முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது.

476 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய சிம்பாவே அணியின் துடுப்பாட்ட வீரர்கள் வலுவான நியூசிலாந்து அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்களை பறிகொடுத்தனர். அந்த அணியில் நிக் வெல்ச் (47 ஓட்டங்கள்) மற்றும் கிரெக் எர்வின் (17 ஓட்டங்கள்) தவிர மற்ற அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

2ஆவது இன்னிங்ஸில் 28.1 ஓவர்கள் தாக்குப்பிடித்த சிம்பாவே 117 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன் மூலம் 3ஆவது நாளிலேயே முடிவுக்கு வந்த இந்த போட்டியில் நியூசிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 359 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அத்துடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றியது.

நியூசிலாந்து தரப்பில் சக்காரி பவுல்க்ஸ் 5 விக்கெட்களும் மேட் ஹென்றி மற்றும் டப்பி தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர். கொன்வே ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

(எ)

## சின்சினாட்டி ஓபின் ரெனிஸ்: 3ஆவது சுற்றில் ரெய்லர் பிரிட்ஸ்

சின்சினாட்டி, ஓக. 11

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரின் 3ஆவது சுற்றுக்கு ரெய்லர் பிரிட்ஸ் முன்னேறினார்.

இந்த சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்று வருகிறது. அமெரிக்க ஓபனுக்கு முன்னோட்டமாக கருதப்படும் நூற்றாண்டு கால பழமைவாய்ந்த இந்தப் போட்டியில் முன்னணி வீரர், வீராங்கனைகள் அனைவரும் பங்கேற்றுள்ளனர்.

இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீரரான ரெய்லர் பிரிட்ஸ், சக நாட்டவரான எமிலியோ நாவா உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ரெய்லர் பிரிட்ஸ் 6-4, 6-4 என்ற நேர் செற் கணக்கில் எமிலியோ நாவாவை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



## பாகிஸ்தானை வீழ்த்தி அயர்லாந்து அசத்தல்



டப்ளின், ஓக. 11

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணி வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதல் போட்டியில் பாகிஸ்தானுக்கு அதிர்ச்சி கொடுத்த அயர்லாந்து அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் அயர்லாந்து 1-0 என முன்னிலையில் இருந்தது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த போட்டியில் முதலில் துடுப்பாட்டம் செய்த பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 168 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து 169 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய அயர்லாந்து அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 171 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை அயர்லாந்து அணி கைப்பற்றியது. (எ)



## அமெரிக்க ஓபின் ரென்னிஸ்: காயத்தால் படோசா விலகல்

நியூயோர்க், ஓக. 11

அமெரிக்க ஓபின் ரென்னிஸ் தொடரிலிருந்து பாலா படோசா விலகியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபின் ரென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் எதிர்வரும் 24ஆம் திகதி தொடங்குகிறது. இந்தப் போட்டியிலிருந்து உலக தரவரிசையில் 12ஆவது இடம் வகிக்கும் 27 வயது ஸ்பெயின் வீராங்கனை பாலா படோசா காயம் காரணமாக விலகியுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் நடந்த விம்பிள்டன் போட்டியின் முதல் சுற்றில் தோல்வியடைந்த படோசா முதுகு வலி காரணமாக அதன் பிறகு எந்த போட்டியிலும் விளையாடவில்லை. (எ)

## ரைபகினா வெற்றி


சின்சினாட்டி, ஓக. 11

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் போட்டியில் ரைபகினா 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சின்சினாட்டி ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் கஜகஸ்தானின் முன்னணி வீராங்கனையான எலினா ரைபகினா மெக்சிக்கோவின் ரெனாட்டா ஜராசுவா உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய ரைபகினா 4-6, 6-0, 7-5 என்ற செற் கணக்கில் ரெனாட்டா ஜராசுவாவை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



## 5 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி

கயானா, ஓக. 11

மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் வென்றது. தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பாட்டம் செய்த மேற்கு இந்திய தீவுகள் அணி 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 280 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக எவின் லூயிஸ் 60 ஓட்டங்கள் எடுத்தார்.

பாகிஸ்தான் தரப்பில் ஷாகின் அப்ரிடி 4 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 281 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய பாகிஸ்தான் அணி 48. 5 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 284 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக ஹசன் நவாஸ் 63 ரன் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 1-0 என பாகிஸ்தான் அணி முன்னிலையில் உள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைக்கு...

சகோதரியே இந்த நெகிழ்ச்சி செயலை நேற்று செய்திருந்தார்.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

அரசியல் கைதியான வி. பார்த்தீபனின் தாயார் தனது மகன் விடுதலையாகி வரும்போது தனது கையால் மகனுக்கு உணவூட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால், அவரின் ஆசை நிறைவேறாமலேயே அவர் அண்மையில் உயிரிழந்தார்.

இந்த நிலையில், பார்த்தீபனின் சகோதரியான வாஹினி தனது தாயாரின் நினைவாக அராலியில் சிறார்களுக்கு தனது கையால் உணவூட்டினார். அரசியல் கைதியின் சகோதரியின் இந்தச் செயல் அங்கிருந்த பலரின் மத்தியிலும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. (ஐ)

## சி.ஐ.டியிடம்...

எதனையும் கூற மாட்டார். ஏனெனில், கடந்த காலங்களில் உண்மையை கூறிய போதிலும் நீதி கிட்டாததால் அந்த கட்டமைப்புகள்மீது அவர் நம்பிக்கை இழந்திருக்கிறார் என்று சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி, சகோதரி கூறியுள்ளனர்.

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தால் பிரதான குற்றவாளியாக பெயரிடப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி மீண்டுமொரு சுயாதீன விசாரணையை கோரி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதியமைச்சர் உள்ளிட்டோருக்கு அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இந்த நிலையில், சோமரத்ன ராஜபக்ஷவின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் அவரின் மனைவி செனாலி சம்பா விஜயவிக்ரம, அவரது சகோதரி ரோஹினி ராஜபக்ஷ ஆகியோர் கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியை கைது செய்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி படுகொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு எனது கணவருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இது மிகப்பாரதூரமான குற்றச்சாட்டு. அந்தக் குற்றத்தைப் புரியாத எனது கணவர் 29 வருடகாலமாகத் தண்டனை அனுபவித்து வருகிறார் என்று செனாலி சம்பா விஜயவிக்ரம கூறினார்.

நாட்டையும் இராணுவத்தையும் காட்டிக்கொடுப்பதாகத் தற்போது பலர் குற்றஞ்சாட்டுகின்ற போதிலும், நான் நாட்டைக் காட்டிக்கொடுக்கவில்லை. மாறாக எனது கணவருக்கும் அவருடன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஏனைய நால்வருக்குமான நீதியையே கோருகிறார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த விடயத்தில் நாட்டுக்குள் எமக்கான நீதி கிடைக்காவிடின் நாம் சர்வதேச விசாரணையின் ஊடாகவே நீதியைக் கோரவுள்ளார் என்றும் உள்நாட்டு அரசாங்கம் தமக்கு எவ்வித நிவாரணத்தையும் அளிக்காத நிலையில் எனது சகோதரர் சர்வதேச விசாரணையில் சகல விடயங்கள் தொடர்பிலும் சாட்சியம் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறார் என்றும் ரோஹினி ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், சோமரத்ன ராஜபக்ஷவின் அறிவிப்பை அடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்தாலும் அவர் அவர்களிடம் எதனையும் கூறமாட்டார். ஏனெனில், கடந்தகாலங்க ளில் உண்மையைக் கூறியபோதிலும் நீதி கிட்டாததன் விளைவாக அந்த கட்டமைப்புகள்மீது தனது கணவர் நம்பிக்கை இழந்திருக்கிறார் என்றும் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி விளக்கமளித்தார்.

மேலும், எனது கணவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கையையும் எமக்கான நீதியையுமே எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## அக்கராயன்...

முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லை பகுதியாகும். இதனால், விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதில் பொலிஸ் நிலையங்களிடையே குழப்பம் காணப்பட்டது. எனினும், விபத்துக் குறித்த விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## செப்.20...

தெரிவித்துள்ளார்.

நேற்று நடந்த புல மைப்பரிசில் பரீட்சைக்கு 3 இலட்சத்து 7 ஆயிரத்து 951 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர் என் பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், 2025 ஆம் ஆண்டுக்கான க. பொ. த உயர்தர பரீட்சை எதிர்வரும் நவம்பர் 10 ஆம் திகதி முதல் டிசம்பர் 5 ஆம் திகதி வரை நடைபெறும், இதே போன்று, க.பொ.த சாதாரண தர பரீட்சை 2026 பெப்ரவரி 17 திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## இளைஞர்....

ஆற்றிய விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"இளைஞர்களின் வேண்டுகோளின் பேரில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு நான் இளைஞர் கழகங்களைத் தொடங்கினேன். பொழுதுபோக்கு, கலை மற்றும் பிற செயல்பாடுகளுக்காக ஒன்றுகூடக்கூடிய ஓர் இடத்தின் மூலம் இளைஞர்களின் திறமைகளையும் திறன்களையும் வளர்ப்பதே இளைஞர் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

அது மிகவும் வெற்றிகரமாக உள்ளது. தற்போது, இளைஞர்கள் சமூகத்தின் பல்வேறு துறைகளில் பங்கேற் கின்றனர். இந்த 40 ஆண்டுகளில், இளைஞர் சங்கங்கள் இந்த நாட்டின் முக்கிய இளைஞர் இயக்கமாக மாறிவிட்டன. இளை ஞர் சங்கங்களிலிருந்து முன்னோக்கி வந்தவர்களில் சிலர் அரசியலில் நுழைந் துள்ளனர். சிலர் வணிகங்களில் உள்ள னர். இவர்கள் அனைவரும் அந்தத் திட்டத்தின் முன்னேற்றத்துக்கும் ஆதரவளிக்கின்றனர்.

அண்மையில், அமைச்சர் அதன் யாப்பில் முன்மொழிந்த திருத்தங்கள் குறித்து ஒரு பெரும் கேள்வி எழுந்துள் ளது. எல்லா இடங்களிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தற்போது தேசிய மாநாடு நடைபெற்று வருகிறது.

எனக்குக் கிடைத்த தகவலின்படி, அதன் பிறகும் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. இது தொடர்ந்தால், இளைஞர் சமூக கழகங்கள் வீழ்ச்சியடையும். இளைஞர் கழகங்களை அரசியல் மயமாக்குவதற்காகவே தொடர்புடைய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பிரச்னையை நீண்ட தூரம் கொண்டு செல்லாமல் தீர்க்க வேண்டும். இந்த வழியில் போராட்டம் நடத்தும் முன்னாள் அதிகாரிகள் குழுவுடனும் தற்போதைய மாவட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடி அனைவரையும் திருப்திப்படுத்தும் தீர்வை வழங்க வேண்டும். இந்த நாட்டின் இளைஞர் கழகங்களை அரசியலுக்குப் பயன்படுத்தக்கூடாது என்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

அது, அமைச்சரும் இந்த இரண்டு குழுக்களும் சேர்ந்து செய்யக்கூடிய ஒரு பணியாகும். அந்தப் பணி செய்யப்படாவிட்டால், இந்த போராட்டங்கள் ஓர் அரசியல் பிரச்னையாக மாறும். பின்னர் அரசியல் கட்சிகளும் இவற்றில் நுழையக்கூடும். அது நடந்தால், இந்த இளைஞர் கழகங்கள் மறைந்துவிடும். அவற்றைப் பாதுகாக்க விரும்புகிறேன். அதனால்தான் இந்த சிறு செய்தியை அனைவருக்கும் வழங்க முடிவு செய்தேன்", என்றார்.

### கொக்குத்தொடுவாய் புதைகுழி:

# மீட்கப்பட்ட சான்றுப்பொருட்களை அடையாளம் காண உதவவேண்டும்

யாழ்ப்பாணம், ஓக. 11

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட சான்று பொருட்களை அடையாளம் காண உதவுமாறு காணாமல் போனோர் பணிமனையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தற்பரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வழக்கு இல: ஏ.ஆர்./804/23 முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத் தொடுவாய் பிரதேசத்தில் உள்ள மனிதப் புதைகுழி குறித்த விசாரணை முல்லைத் தீவு நீதிவான் முன்னிலையில் நடத்தப்பட்டு வருகின்றது. முதற்கட்ட தொல்பொருள் பகுப்பாய்வுகள் இந்த புதைகுழி 1994-1996 காலகட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கூறுகிறது.

காணாமல்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களை கண்டுபிடிப்பதற்கான காணாமல் போன ஆட்கள் பற்றிய பணிமனையின் பரந்த முயற்சிகளில் இது ஓர் அங்கமாகும். 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் கருமங்களை ஆற்றுதல்) சட்டத்தின் பிரிவு 12 (ஆ) இன் கீழ், ஓ. எம். பி. அதன் கடப்பாடுகளின்படி, மனிதப் புதைகுழி மீதான விசாரணையை கண்காணித்து வருகிறது.

புதைகுழியில் உள்ள மனித எச்சங்களின் அடையாளம் குறித்து தீர்மானம் மேற்கொள்வதற்குத் துணைபுரியுமாறு காணாமல் போன ஆட்கள் பற்றிய பணிமனையிடம் முல்லைத்தீவு நீதிவான் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பொதுமக்களிடம் இந்த வழக்கு தொடர்பான முக்கியமான தகவல்கள் இருக்கலாம் என்பதை காணாமல் போன ஆட்கள் பற்றிய பணிமனை நம்புகிறது. புதைகுழி அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்பில் பொதுமக்கள் தகவல்களையும் அடையாளங்களையும் உறுதிப்படுத்த கொள்ளமுடியும்.

இது தொடர்பான தகவல்களை இலக்கம் 40 மூன்றாம் மாடி புத்கமுவ வீதி இராஜகிரிய, இல 54 தர்மாராம வீதி கோட்டை மாத்தறை உப பணிமனை, மாவட்ட செயலகம் முல்லைத்தீவு, கோட்டை வீதி பழைய மாவட்ட செயலக கட்டடம் மட்டக்களப்பு, மூன்றாம் மாடி புதிய கட்டடம் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், மாவட்ட செயலகம் மன்னார், ஏ9 வீதி நீதிமன்றம் அருகாமை கிளிநொச்சியிலுள்ள அலுவலகங்களில் எதிர்வரும் செப்ரெம்பர் 4ஆம் திகதி வரை வருகை தந்து தகவல்களை வழங்க முடியும்.

அல்லது இராஜகிரிய 011 286 1431, மாத்தறை 041 224 4684, முல்லைத்தீவு 021 228 6030, மட்டக்களப்பு 065 222 2229 , யாழ்ப்பாணம் 021 221 9400, மன்னார் 023 222 3929 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலமும் தகவல்களை வழங்க முடியும் என்றும் கூறினார். (ஐ)

## மலேரியாவால்...

மருத்துவமனையில் 6 நாட்களாக சிகிச்சை பெற்று வந்திருந்தார்.

இந்த நிலையில், சிகிச்சை பலனளிக்காமல் அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு செல்வதற்காக ஆபிரிக்க நாடொன்றில் சில நாட்கள் தங்கியருந்தார் என்றும் அங்கேயே அவருக்கு மலேரியா நோய் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (ஐ)

## வடகிழக்கில்...

உயிரிழந்தார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் நேற்றைய தினம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

அத்துடன், இந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

## மனித உரிமைகள்...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியேறியதால் இலங்கை குறித்த புதிய மையக் குழுவின் அமைப்பு மாற வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா, அமெரிக்கா, கனடாவுடன் முன்னைய மையக் குழுவின் ஒரு பகுதியாக இருந்த மலாவி, மொண்டிநீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகியவை இந்த ஆண்டு தீர்மானத்தில் பங்கேற்காமல் போகலாம் என்று இலங்கை அரசாங்கம் நம்புகிறது.

இந்தநிலையில் கடந்த ஜூன் மாதம் இலங்கைக்கு வந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், 60ஆவது அமர்வில் "இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை" குறித்த தனது அறிக்கையை முன்வைப் பார்.

வரைவு திட்டத்தின்படி, அமர்வு தொடங்கும் நாளில் - செப்ரெம்பர் 8 ஆம் திகதியன்று இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஆணையாளர் டர்க் ஏற்கனவே செம்மணி புதைகுழியைப் பார்வையிட்டுச் சென்றுள்ளமையால் இலங்கை குறித்த தனது அறிக்கையில் முக்கியமாக அந்த புதைகுழி இடம்பெற வாய்ப்புள்ளது என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## சலுகைகளை...

முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, சந்திரிகா குமாரதுங்கவின் பிரதிநிதிகள் கலந்துரையாடினர் என்று கூறப்படுகிறது.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டாலும், அரசாங்கம் நினைப்பது போல் அதை செயல்படுத்த முடியாது என்று இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற மூத்த சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார்.

இருப்பினும், அடுத்த 14 நாட்களுக்குள் இந்த புதிய சட்டமூலத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முன்னாள் ஜனாதிபதிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் அவர் கூறினார். (ஐ)

## மன்னார்...

குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதி என்று அவர் குறிப்பிட்டமை பலரிடத்தேயும் எதிர்ப்பையும் விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எதிராக அவரின் கீழ் பணியாற்றுபவர்கள் பல குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர். அவர் பலரையும் பழிவாங்கும் செயல்பாட்டில் ஈடுபடுகிறார் என்றும் அவர்கள் கூறினர்.

மேலும், இந்த விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டன என்றும், மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளிநாடு சென்றுள்ளமையால் அவர் நாடு திரும்பிய பின்னர் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என ஆளுநர் தெரிவித்தார் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஆஸி. ஆளுநர் நாயகம் சமந்தா தனது நாட்டுக்கு திரும்பினார்



கொழும்பு, ஓக. 11

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்த அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டின் குழுவினர் நேற்று நாடு திரும்பினர்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து இவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட்டனர்.

இலங்கை வந்த அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் ஜனாதிபதி அநுர குமார, பிரதமர் ஹரணி அமரசூரிய ஆகியோரை சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன்போது, இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புகளை வலுப்படுத்துதல், ஒத்துழைப்பு தொடர்புகளை விரிவுபடுத்துதல் குறித்தும் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் உள்ளிட்ட குழுவினரை வழியனுப்பும் நிகழ்வில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிருஷாந்த அபேசேன, வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் குழுவும் இணைந்து கொண்டனர். (ஐ)

## 30 நீதிவான்கள், நீதிபதிகள்மீது குற்றச்சாட்டுகள் முன்வைப்பு!

கொழும்பு, ஓக. 11

நாட்டில் 30 நீதிவான்கள், நீதிபதிகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில், ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலித்து வருவதாக நீதிச் சேவை ஆணைக்குழுவை கோடிகாட்டி ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரத்தில் மாத்திரம் ஐந்து மாவட்ட நீதிபதிகள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மொறட்டுவை மாவட்ட நீதிபதி திலின கமகே, மொனராகலை மாவட்ட மேலதிக நீதிபதி ரஞ்சனி கமகே ஆகியோரும் பணி இடை நீக்கம் செய்யப்பட்டனர். இதனிடையே, பணி நீக்கப்பட்டுள்ள ஏனைய மூன்று நீதிபதிகளும் அண்மையில் நீதிச் சேவையில் இணைக்கப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது.

இவர்களில் ஒருவர் தேர்தலில் போட்டியிட்டார் என்றும் ஆனால், அவர் இந்த சேவையில் நியமிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த விடயத்தை தெரிவிக்கவில்லை எனவும் நீதிச் சேவை ஆணைக்குழு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துட், தற்போது பெறப்பட்டுள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் நீதிச் சேவைகள் ஆணைக்குழு பணிமனை தெரிவித்துள்ளது. (ஐ)

## 'ஈஷி காஷ்' முறையை சாதகமாக்கி போதைப்பொருள் விற்றவர் கைது!

கொழும்பு, ஓக. 11

'ஈஷி காஷ்' பணப்பரிமாற்ற முறையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி ஹெரோயின் போதைப் பொருளை விநியோகித்து வந்த பிரதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயினும் கைப்பற்றப்பட்டது.

களுத்துறை குற்றத் தடுப்பு பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். இவர், களுத்துறை, மத்துகம, பாணந்துறை, பயாகல, பேருவளை உள்ளிட்ட பல பகுதிகளில் ஈஷி காஷ் பணப்பரிமாற்ற முறையில் போதைப் பொருட்களை விநியோகித்தமை தெரிய வந்தது.

கைதான சந்தேகநபர் 41 வயதுடையவர் என்றும் இதற்காக அவர் பயன்படுத்திய ஓட்டோ, கைபேசி என்பன கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பயங்கரவாத சட்டத்தை நீக்குமாறு தமிழர் தரப்பு கூறுவது முறையற்றது

### முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஓக. 11

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும் என்று தமிழ் அரசியல் தலைமைகள் தொடர்ச்சியாக வலியுறுத்துவது முறையற்றது. எனினும், அந்தச் சட்டத்தின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்ட நீக்கம் தொடர்பில் அவரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் வெளிப்படைத்தன்மையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும் என்று தமிழ் அரசியல் தலைமைகள் தொடர்ச்சியாக வலியுறுத்துவது முறையற்றது.

உலகளாவிய ரீதியில் பயங்கரவாதம் தற்போது பல்வேறு வழிகளில் செயல்படுகிறது. இவ்வாறான நிலையில் இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்வது பிரச்னைக்குரியதாக அமையும். தேசிய பாதுகாப்பை முன்னிலைப்படுத்தியே அனைத்து தீர்மானங்களையும் எடுக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வது தொடர்பில் எமது அரசாங்கத்தில் வெளிப்படையான பல நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சிவில் தரப்பினர் உட்பட கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதாந்திரிகளுடன் பேச்சுகளில் ஈடுபட்டோம். சட்டவரைவு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கும் தறுவாயில் இருந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதாக தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யும் காலவரையறையை ஜனாதிபதியால் குறிப்பிட முடியுமா? இந்த அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் என்ற நம்பிக்கை இல்லை. அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் ஒன்றிணையும் போது பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் ஆயுதமாக பயன்படுத்தும் - என்றார். (ஐ)

## மாணவர்களை கேள்வி கேட்டு அழுத்தத்துக்கு உள்ளாக்காதீர்

### பரீட்சைகள் ஆணையாளர் பெற்றோருக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 11

நடந்து முடிந்த 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் வினாத்தாளுக்கு பதிலளித்த விதம் குறித்து பெற்றோர்கள் மாணவர்களிடம் கேள்வி கேட்பதைத் தவிர்க்க வேண்டும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி அறிவுறுத்தியுள்ளார்.

நாடு முழுவதும் புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "குறிப்பாக இந்த சிறு பிள்ளைகள் தங்கள் குழந்தைப் பருவத்தை மகிழ்ச்சியாகக் கழிக்க ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும். புலமைப்பரிசில் பரீட்சையை அதிக மன அழுத்தத்துக்கு ஆளாகாமல் தடுப்பது நம் அனைவரின் பொறுப்பாகும். பிள்ளைகள் தங்கள் திறனுக்கு ஏற்ப பரீட்சை எழுதுகிறார்கள்.

பிள்ளைகளின் திறன்கள் வேறுபட்டவை. எனவே பிள்ளைகளை ஒப்பிட்டுப் பார்த்து, இன்று பரீட்சையில் மாணவர்கள் என்ன எழுதினார்கள் என்று கேட்டு? அவர்கள் தவறான பதில் எழுதியிருந்தால் அவர்களை திட்டவோ தண்டிக்கவோ வேண்டாம். அவர்கள் சரியான பதில் எழுதினாலும் சரி, தவறான பதில் எழுதினாலும் சரி, அந்த நேரத்தில் பிள்ளைகள் வினாத் தாளை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதே முக்கியம்.

எனவே நம் பிள்ளைகள் எப்படி பதிலளித்தாலும் சரி, பிள்ளைகளின் குழந்தைப் பருவத்தை நாம் திரும்பப் பெற முடியாது. எனவே இந்த குழந்தைப் பருவத்தை பதில்களை எழுதுவதை அடிப்படையாகக் கொள்ளாதீர்கள்.

புலமைப் பரிசில் பரீட்சை என்பது பிள்ளைக்கு ஒரு பரீட்சை மட்டுமே. இந்த மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பரீட்சைகளை எதிர்கொள்ளும் திறனைக் கொண்டுள்ளனர். அதனால் புலமைப்பரிசில் பரீட்சையை அடிப்படையாக கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அழுத்தத்துக்கு உள்ளாக்கும் வகையில் செயல்பட வேண்டாம் - என்றார். (ஐ)

## இலங்கையின் முதல் செல்வந்தராக இஷார



கொழும்பு, ஓக. 11

நாட்டின் முதலாவது பணக்காரராக இஷார நாணயக்கார உள்ளார் என்று கல்ஃப் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது. நடப்பு ஆண்டில் அவரின் சொத்து மதிப்பு 160 கோடி டொலர் ஆகும்.

2025ஆம் ஆண்டுக்கான தெற்காசிய பணக்காரர்களின் பட்டியலை கல்ஃப் நியூஸ் வெளியிட்டுள்ளது. இதில், இந்தியாவின் முகேஷ் அம்பானியை 11 ஆயிரத்து 800 கோடி அமெரிக்க டொலர் நிகர மதிப்புடன் பிராந்தியத்தின் மிகப் பெரிய செல்வந்தராக இடம்பிடித்துள்ளார்.

இதேநேரம், பாகிஸ்தானின் ஷாஹித் கான் (ஆயிரத்து 350 கோடி அமெரிக்க டொலர்), பங்களாதேஷின் மோசா பின் ஷம்ஷர் (ஆயிரத்து 200 கோடி அமெரிக்க டொலர்), நேபாளத்தின் பினோத் சௌத்ரி (160 கோடி அமெரிக்க டொலர்) மற்றும் இலங்கையின் இஷார நாணயக்கார (160 கோடி அமெரிக்க டொலர்) சொத்து மதிப்புடன் அந்தந்த நாடுகளின் முதல் நிலை செல்வந்தர்களாக உள்ளனர்.

கல்ஃப் நியூஸின் கூற்றுப்படி, அம்பானியின் சொத்து மதிப்பு மற்ற தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த செல்வந்தர்களின் சொத்து மதிப்பை விடமிகமிக அதிகமாகும். இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்திலுள்ள ஷாஹித் கானின் சொத்து மதிப்பை விட அம்பானியின் சொத்து மதிப்பு 10 மடங்கு அதிகமாகும்.

இலங்கையை பொறுத்தவரை இந்தப் பட்டியலில் முன்னர் முதலிடத்தில் நீடித்தவர் தம்மிக பெரேரா ஆவார். இஷார நாணயக்கார 10க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பாடுகளைக் கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி சேவைகள் மற்றும் முதலீட்டு கூட்டு நிறுவனமான எல். ஓ. எல். சி. ஹோல்டிங்ஸை வழிநடத்துகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜே.வி.பியின் பணய கைதியாக இளைஞர் கழகங்கள் மாற்றம்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஓக. 11

இளைஞர் கழகங்கள், ஜே.வி.பியின் சோஷலிச இளைஞர் சங்கத்தின் பணயக் கைதியாக்கப்பட்டுள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இளைஞர் சம்மேளன உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீண்ட காலமாக, நமது நாட்டின் இளைஞர், யுவதிகளுக்கு இனம், மதம், சாதி, வர்க்கம் மற்றும் கட்சி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் உரிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுத் தந்த இளைஞர் கழகங்கள் இப்போது முழுமையாக அரசியல் மயமாக்கப்பட்டுள்ளன.

அவை தற்போதைய அரசாங்கத்தின் பகடைக்காயாக மாற்றப்பட்டு ஜே. வி. பி.யின் அரசியல் பிடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இளைஞர் கழகங்கள் சோசலிச இளைஞர் சங்கம் என்ற அரசியல் அமைப்பின் பணயக்கைதிகளாக மாறிவிட்டன.

பிரதேச, மாவட்டம், தேசிய மட்டம் என்ற அடிப்படையில் செயல்பட்ட இளைஞர் சம்மேளனங்கள் இன்று இளைஞர், யுவதிகளின் ஆற்றல் திறமைக்கு இடம்கொடுக்காமல் ஜே. வி. பியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுள்ளன. அமைக்கப்படவுள்ள தேசிய இளைஞர் சம்மேளன தெரிவில் ஆளும் தரப்பினரின் அரசியல் ஆதரவாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அரச அதிகாரம், அரசாங்கத்தின் அதிகாரம், அமைச்சு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர், அதிகாரிகள் போன்ற தரப்பினரின் அதிகாரங்களைப் பயன்படுத்தி இளைஞர்கள்மீது அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

தற்போதைய அரசாங்கம் இளைஞர்களிடமிருந்து பறித்த இளைஞர்களின் உரிமைகளை - ஜனநாயக உரிமைகளை இளைஞர்களுக்கு மீண்டும் பெற்றுத் தருவோம் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org